விலை ரூபா: 7.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 01 | வியாழக்கிழமை | (16.12.2004) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 363

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது





## கேள்விக்குறியாகும் சமாதானம்

# எரிக்சொலுடனான சந்திப்பு நம்பிக்கையை தரவில்லை!

## சு.ப. தமிழ்ச்செல்வன் பேட்டி

(நமது நிருபர்)

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிகழ்வுகள், சம்பவங்கள் மற்றும் தெற்கிலிருந்து வருகின்ற சமாதானத்திற்கு விரோதமான கருத்துக்கள், இவற்றை வைத்துப் பார்க்கின்றபோது பேச்சுவார்த்தையோ, சமாதான முன்னெடுப்புக்களோ ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையை எமக்கு ஏற்படுத்தவில்லை. இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எரிக் சொல்ஹெய்முடனான சந்திப்பை முடித்துக்கொண்டு சு.ப. தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வி வருமாறு,

**கேள்வி: நெருக்கடி நிலையை எவ்வகையில் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் அறிவித்திருக்கின்றீர்கள்?**

பதில்: எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் தெளிவாக கூறியிருக்கின்றோம். சமாதான முன்னெடுப்புக்கள் மீதும், அமைதி முயற்சிகள் மீதும் எமது மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கைகள் தற்போது தகர்ந்திருக்கின்றது. மக்கள் பொறுமையை இழந்து இருக்கின்றார்கள். அதாவது நீண்டகால யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பெரும் அவல நிலையை நெருக்கடியை எதிர்நோக்குகின்ற எமது மக்கள் பெரும் விரக்தி நிலையை அடைந்திருக்கின்றார்கள்.

அவர்கள் இந்தப் பேச்சுவார்த்தை முயற்சிகள் மீது நம்பிக்கையை இழந்து வருகின்றார்கள். எமது மக்களுக்கு நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் எமது மக்களுடைய அவசரமான மனிதாபிமான பிரச்சினைக்கு தீர்வுகண்டு ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களை முன்னெடுப்பதுதான் எமது மக்களுக்கு நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு உதவும். இந்தவகையில் எமது தேசியத் தலைவர் இந்த நிலைப்பாட்டை, தனது அவசர வேண்கோள் மூலம் தனது உரையிலேயே அரசாங்கத்திற்கு தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

அதற்கு சாதகமான பதிலை தெற்கில் இருந்து விரைவாக பெற்றுத் தருவதன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் முரணான கருத்துக்கள் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்

### டோக்கியோ மாநாட்டு இணைத் தலைமை நாடுகள் அதிருப்தி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் ஜே.வி.பியின் செயற்பாடுகள் குறித்து டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் இணைத் தலைமை வகித்த நாடுகள் நேற்று கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## "அ"புரத்திலிருந்து தரைமார்க்கமாக வன்னிக்குச் சென்றார் சொல்ஹெய்ம்

(கிளிநொச்சி)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சென்ற ஹெலிகொப்டர் சீரற்ற காலநிலை காரணமாக அனுராதபுரத்தில் தரையிறங்கியது.

கிளிநொச்சியில் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதற்காக நேற்று விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டரில் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து எரிக்சொல்ஹெய்ம் பயணமானார்.

சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி செல்ல முடியாது எனத் தெரிவித்து அவர் பயணித்த ஹெலிகொப்டர் அனுராதபுரத்தில் தரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை பேணுவதில் இருதரப்பினரும் உறுதியாக உள்ளனர்

### சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நம்பிக்கை

சமாதானப் பேச்சுவார்த்தையினை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடியவகையிலான ஒரு தீர்வினை ஏற்படுத்துவதற்கு அனுசரணையாளர் என்ற வகையில் தமக்கு கடினமாக இருப்பதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் கிளிநொச்சியில் சந்தித்த பின் ஊடகவியலாளருக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக இரு தரப்பினரிடையேயும் ஏற்பட்ட சில எரிச்சலூட்டுகின்ற நடவடிக்கைகள் நோர்வே அரசிற்கு கவலையளிப்பதாக அவர் கூறினார்.

எனினும் இரு தரப்பினருமே போர்நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து மேற்கொள்ளப் போவதாக தெளிவாக வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்கள். இது சமாதான முயற்சிகள் குறித்த நம்பிக்கையை எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகள் குறித்த நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அது எமக்கு முக்கிய பிரச்சினையாக எழுந்துள்ளது. இதனைத் தீர்க்க நாங்கள் முழு மூச்சுடன் ஈடுபட்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-04)

## தமிழ்ச்செல்வன் - சொல்ஹெய்ம் நேற்று சந்தித்துப் பேச்சு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினருக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று பிற்பகல் 2 மணிக்கு விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

(ச-04)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## இன்று ஒரு தகவல்

# இசைமருந்து

இசையே ஒரு மருந்து என்று சொன்னால் நீங்களும் நம்புவீர்களா? நம்பமாட்டீர்களா? சொல்பவர்களைச் சந்தேகமாகப் பார்ப்பீர்கள் "இசை விருந்து என்று சொல்வது தான் நமது பழக்கம். இசை மருந்து என்று சொன்னாலும் அதில் ஒன்றும் தவறு இல்லை. இசை என்றால் ஏதோ ஒருவர் பாட இன்னொருவர் தலையாட்டிவிட்டுப் போகும் சமாச்சாரமில்லை. அதில் நிறைய விஷயம் உள்ளது.

"காஞ்சிப் பண்" பாடினால் புண்கள் விரைவில் மாறிவிடும் என்று சங்ககாலப் புலவர்கள் பாடியுள்ளனர். "அவாகளுக்கு என்ன? ஏதோ ஒரு எண்ணத்தில் அப்படி பாடினார்கள்" என்று நினைக்கலாம். ஆனால் இப்போது சில மருத்துவர்கள் சொல்வதைப் பார்த்தால் அவர்கள் தமது அனுபவத்தைத்தான் பாட்டில் சொல்லியிருப்பார்கள் போல் தெரிகிறது.

பம்பாயிலிருந்த ஒரு மருத்துவர் இசை மூலம் இதய நோயைக் குணப்படுத்திவிடலாம் என்று கூறியிருக்கிறார் சும்மா இல்லை. விஞ்ஞான ரீதியாகச் சொல்கிறார் இசை மூலம் அவர் சில இதய நோய்களைக் குணப்படுத்தியிருக்கிறார். அதுமட்டுமல்ல... சில ஆஸ்துமா நோயாளிகளையும் குணப் படுத்தியிருக்கிறார். முற்றிய நிலை யிலிருக்கும் காச நோயைக் கூட இசை மூலமாக குணப்படுத்த முடியும் என்பது நிரூபணமாகியிருக் கிறது என்றும் அவர் சொல்கிறார்.

பொதுவாக நமக்கு வரும் வியாதிகளுக்கும் மனதிற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது. இசையைக் கேட்கும் போது மனம் லேசாகும்... மனதிற்கு இதம் கிடைக்கும். அதனால் வியாதி குணமாவதற்கும் இது காரணமாக அமையும் போலிருக்கிறது. கடவுளை வணங்கும் போது கண்ணை மூடிக் கொண்டு சிலர் பாடுகிறார்களே எதற்காக? இவரது பாடலை கடவுள் மிகவும் ரசித்துக் கேட்கிறார் என்பதற்காகவா? இவர் பாடுவது இவருக்கே ஒரு மருந்தாகிறது அதுதான் காரணம். எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தா லும் சரி அவர்கள் வேண்டுதலை இசை ரூபமாகத் தான் சொல்கின்றனர்.

கந்தசஷ்டி கவசம், கந்தரனுபூதி, விஷ்ணு சகஸ்ர நாமம், சுப்ரபாதம் எல்லாம் சொல்வது எதற்காக? இதற்கான ஆன்மீக காரணங்கள் எதுவாக இருப்பினும் இதயத்திற்கு இதமாக இருக்கிற தென்பது எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு காரணம். மதம் பிடித்த யானை கூட இசைக்கு அடங்கிவிடும்.

ஒரு பெரிய மலையடிவாரத்தில் மதம் பிடித்த யானை ஒன்று பிளிறிக் கொண்டே வருகிறது. அது ஏன் ஓடி வருகிறது தெரியுமா? தினைப்புலத்தில் உள்ள தினைக் கதிரை உண்பதற்காக அந்த நேரத்தில் தினைப்புலத்தை ஒரு சிறு பெண்பிள்ளை காவல் காத்து நின்றாள். சிறிது நேரத்திற்கு முன்பு தான் பக்கத்தில் உள்ள சுனை நீரில் நீராடி விட்டு வந்து நின்றாள். நீளமான கூந்தல் ஈரமாக இருக்கிறது. அதனால் அதை கோதிக் கொண்டு இருக்கிறாள். அந்த சிறு பெண் தனது கூந்தலைக் கோதிக் கொண்டே மிகவும் இனிமையான குறிஞ்சிப் பண்ணாகிய தமிழ் இசையைப் பாடிக் கொண்டே தலை முடியைக் காய வைத்தாள்.

அங்கே ஓடி வந்த யானை இந்த இசையைக் கேட் டது. அவ்வளவுதான் அப்படியே அசையாமல் நின்றது. தினைக் கதிரை தின்ன வந்ததையே மறந்துவிட்டு இசையில் மயங்கி நிற்கிறது அந்த யானை.

மயிலும் பாம்பும் பகை, யானையும் சிங்கமும் பகை, மானும புலியும் பகை. ஆனால் புல்லாங்குழல் இசையைக கேட்டால் இவை பகையை மறந்து கூடியிருந்து மகிழ்வாக இருந்ததாக பெரியபுராணத்தில் ஒரு பாட்டு இருக்கிறது. பகைமையை மறந்துவிட வைத்துவிடுகிறதென்றால் பாருங்கள் இசைக்குள்ள சக்தி எப்படிப்பட்டதென்று.

ஒரு சங்கீத வித்துவானைப் பற்றி இருவர் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருவர் சொல்கிறார் "அதோ இருக்கிறாரே அந்த வித்துவான் பாடினால் நாள் முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாம்" என்றார். "அவ்வளவு நன்றாகப் பாடுவாரா?" என்றார் அடுத்தவர். அதற்கு இவர் "அப்படியில்லை அவர் ஆரம்பித்தால் அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க மாட்டார். அதனால் அப்படிச் சொன்னேன்" என்றார் இவர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே விமானச்சேவை இடைநிறுத்தப்பட்டது

## தயா ரத்னாயக்க விளக்கம்

(கொழும்பு)

கடநத காலங்களில் ஏற்பட்ட சம்பவங்களின் விளைவாக பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு விமானங்களை அனுப்புவதில்லை என்று பாதுகாப்பு அமைச்சினால் முடிவு எடுக்கப்பட்டது என பாதுகாப்பு அமைச்சின் சார்பில் பேசவல்ல அதிகாரி தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிக்குள் செல்லவோ அங்கிருந்து வரவோ அரசு விமானப் பயண வசதிகள் வழங்கப்போவதில்லை என அறிவித்திருந்தமை தெரிந்ததே.

வழக்கமாக நோர்வே தரப்பினரோ அல்லது போர் நிறுத்தககண்காணிப்புக்குழு உறுப்பினர்களோ விடுதலைப்புலிகளின பகுதிகளுக்குள் சென்றால் விடுதலைப்புலிகளின் பகுதிக்குள் வர விமானப்படை விமானங்கள் மற்றும் உலங்கு வானூர்திச் சேவை வழங்கப்பட்டது.

அதனால்,இந்நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டமை குறித்து ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே தயா ரத்னாயக்க இவ்வாறு தெரிவித்தார். அண்மையில் வாழைச் சேனை பிரிகேட் கொமாண்டரின் வாகனத்தின் மீது தாக்குதல் நடாத்தப்பட்டிருந்தது.இதுபோன்ற சம்வங்களுக்கு யார் பொறுப்பு என்பது குறித்து குழப்பமான நிலை இருந்து வந்தது.

எது எப்பொழுது வேண்டுமானாலும் நடக்கலாம் என்ற சூழ்நிலையில், நாங்கள் முக்கிய புள்ளிகளையோ, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரையோ கொண்டு செல்கையில் ஏதேனும் அசம்பாவிதங்கள் நடைபெறுமானால் பெரும் பிரச்சினை ஏற்படும். இந்நிலையில் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே அரசும் பாதுகாப்பு அமைச்சகமும் இநத முடிவை எடுத்துள்ளன.

எனினும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் விமானப் படை விமானங்களில் கொண்டு செல்லப்படமாட்டார்கள் என்று எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. விடுதலைப்புலிகளிடமிருந்து ஏதேனும் விண்ணப்பம் வருமானால் அது குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். எந்தவொரு முடிவும் பாதுகாப்பு அமைச்சின மட்டத்திலேயே எடுக்கப்படும் எனவும் தயா ரத்னாயக்க மேலும் தெரிவித்தார். (ற-4)

# கசிப்பு வழக்கில் உரும்பிராய் வாசிக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக 392 ராம்ஸ் கசிப்பு, 3656 டிராம்ஸ் கோடாவினை தன் உடமையில் வைத்திருந்தமை மற்றும் சட்டவிரோதமான முறையில் கசிப்பினை உற்பத்தி செய்யக்கூடிய உபகரணங்களை வைத்திருந்தமை மற்றும் சட்டவிரோதமாக கசிப்பு தயாரித்தமை ஆகிய குற்றங்களைப் புரிந்த உரும்பிராய் வாசி ஒருவருக்கு ஒவ்வொரு குற்றத்திற்கும் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் நான்கு குற்றங்களுக்கும் 60 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாகவும் 20 ஆயிரம் ரூபாவை தர்மப்பணமாகவும் அறவிடுமாறு யாழ். மாவட்ட நீதவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

தர்மப்பணத்தில் 10 ஆயிரம் ரூபாவை கானான் சிறுவர் இல்லத்திற்கும் 10 ஆயிரம் ரூபாவை கோண்டாவில் சிவபூமி வலுவிழந்தோர் சிறுவர் இல்லத்திற்கும் வழங்கும் படி நீதிபதி குறிப்பிட்டுள்ளார். (ப-19)

# இராசிபலன்

**16.12.2004**
**(மார்கழி 1 வியாழக்கிழமை)**
**பஞ்சமி பி.இ 8.22 மணிவரை**
**திரு வோணம் மு.ப 7.33 மணிவரை**
**அவிட்டம் பின்னிரவு 6.13 மணிவரை**
**இராகுகாலம் 1.52- 3.22 மணிவரை**
**சுபநேரம் 7.52- 9.22 மணிவரை**
**விநாயக விரதம் 20ஆம் நாள்**

- **மேடம்** — அதிகாரம், நல்ல செய்தி, தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி.
- **இடபம்** — புதிய திட்டமிடல், வீண் பயம், பிரயாணம், பொருள் விரயம்.
- **மிதுனம்** — மனக் கவலை, பொருள் விரயம், அஜீரணக் கோளாறு, கலகம்.
- **கடகம்** — மனோ தைரியம், அபூர்வ சந்திப்பு, தொழில் வருமானம், போசன சுகம்.
- **சிங்கம்** — சத்துரு ஜெயம், ஆரோக்கியம், தடைப்பட்ட காரியம் கைகூடும், சுப நிகழ்வு.
- **கன்னி** — பணக் குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, கௌரவக் குறைவு.
- **துலாம்** — தன்னம் பிக்கைக் குறைவு, தொழில் சிந்தை, பண விரயம், ரோக நிலை.
- **விருச்சிகம்** — நற் கீர்த்தி, மனோதைரியம், தொழில் நன்மை, போசன சுகம்.
- **தனுசு** — அதிக செலவு, மனோசங்கடம், காரிய தாமதம், உஷ்ண வியாதி.
- **மகரம்** — வெகுமானம், சயன சுகம், காரிய சிந்தை, நண்பர்கள் சந்திப்பு.
- **கும்பம்** — சோம்பல் நிலை, தன விரயம், காரிய தாமதம், உறவினர் வெறுப்பு.
- **மீனம்** — நண்பர்கள் சந்திப்பு, ஆனந்தம், குடும்ப நலம், தனதானிய சேர்க்கை.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது — வளவன்**

# பொலிஸில் களையெடுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை செய்யப்படுவதற்கு இரு நாட்களுக்கு முன்னர், முக்கிய கொலைச் சந்தேகநபரான நௌபர் நடாத்திய தேநீர் விருந்து உபசாரத்திற்கு சென்றிருந்த பொலிஸ் அதிகாரி களின் பெயர் பட்டியலை ஒப்படைக்குமாறு தேசியப் பொலிஸ் சேவை ஆணைக்குழு பொலிஸ்மா அதிபரைக கேட்டுள்ளது.

கிரிமினல்களுடன் தொடர்பினை ஏற்படுத்தியுளள பொலிஸ் அதிகாரிகளால் பொலிஸ் துறைக்கு பெரும் அவமானம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக விரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ற-6)

# இலங்கைக்குப் படையெடுக்கும் வெளிநாட்டுப் பறவைகள்!

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து உந்தல சரணாலயத்தை நாடும் பறவைகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அம்பாந்தோட்டை அலுலகம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா, நைஜீரியா போன்ற நாடுகளிலிருநது கடற்பறவைகள் இலங்கைக்கு வருவதாகத் தெரியவருகிறது.

இவ்வாறான பறவைகளை இனங் காண்பதற்காக அவற்றின கால்களில் வளையங்களைப் பொருத்தும் செயற்பாடு அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் ஒன்பதாம் திகதி வரை நடைபெறும்.

ஒரே பறவை பல தடவைகள் இலங்கை வந்திருப்பது ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. சுவாத்திய மாற்றங்கள், உணவைத் தேடுவதில் ஏற்படும் சிரமங்கள் போன்ற காரணங்களாலேயே பறவைகள் புலம் பெயர்வதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# மறவன் மாஸ்டரின் வித்துடலுக்கு ஏராளமானோர் இறுதி அஞ்சலி

(சில்லாலை)

கடற்புலிகளின் மூத்த உறுப்பினர் லெப்.கேணல் மறவன் மாஸ்டரின் வித்துடல் யாழ்.குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த திங்கட்கிழமை மறவன் மாஸ்டரின் வித்துடல் தாங்கிய ஊர்தி சண்டிலிப்பாய்,சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் எடுததுச் செல்லப்பட்டு அவரது வித்துடல் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அவ்வப் பகுதிகளில் இவ் அஞ்சலி நிகழ்வுகளின் போது சோககீதம் இசைக்க விடப்பட்டது.

அத்துடன் நேற்று முன்தினம் காலை வடமராட்சியை இவ் ஊர்தி சென்றடைந்தது. பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை 11.00மணிக்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை வடமராட்சி கடற்புலிகளின அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகனும், ஈகைச்சுடரை மறவன் மாஸ்டரின் மகனும் ஏற்றி வைத்தனர்.

முன்னாள் பருத்தித்துறை நகரசபை உப தலைவர் வின்சன்டி போல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வல் ,தேசிய எழுச்சிப் பேரவையின் வடமராட்சி பொறுப்பாளர் ஏ.எம் செபஸ்தியன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், தூயவன் அரசறிவியல கல்லூரி அதிபர் அரசண்ணா, வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச மேலாளர் கங்கைஅமரன் மற்றும் தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப. கனகலிங்கம் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர்.

வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா மற்றும் கடற்புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் ஆகியோர் மறவன் மாஸ்டரின் வித்துடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து பொது மக்களின் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. (ற-58,52)

# செய்தித்துளிகள்

## நிதியுதவி

(மருதங்கேணி)

வடமராட்சிக் கிழக்கு செம்பியன் பற்று கெற்பலி நேரியார் சனசமூக நிலையத்தின் அபிவிருத்திக்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து யாழ்.பாராளுமன்ற உறுப்பினர் இ.சிவனேசன் 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இதேவேளை, மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகத்திற்கும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் இ.சிவனேசன் 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். (ப-35)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

இந்து சமயப் பேரவையினால் இன்று வியாழக்கிழமை காலை 8.00 மணிமுதல் திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளது.

இல:141 பலாலி வீதி கந்தர். மடத்தில் அமைந்திருக்கும் தலைமைச் செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் சிவன் அடியார்களைக் கலந்து கொள்ளுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழு கேட்டுக்கொளகின்றது. (க-5)

## ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இசை நிகழச்சியில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலின் போது ஊடகவியலாளர் ஒருவர் கொல்லப்படடமையைக கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கம் உழைக்கும், பத்திரிகையாளர் அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்கின்ற இந்த ஆர்ப்பாட்டம் இன்று வியாழக்கிழமை கொழும்பு கோட்டைத் தொடருந்து நிலையம் முன்பாக இடம் பெறவுள்ளது. (க)

★★★

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி. திஸநாயக்க கைதுசெய்யப்பட்டமையைக் கண்டித்து கட்சி உறுப்பினர்கள் பேரணியொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இன்று ஆரம்பமாகவுள்ள இந்தப் பேரணி ஹிங்கிரான் கொடாவில் ஆரம்பித்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள விகாரமாதேவி பூங்காவில் முடிவடையும்.

பேரணியின் முடிவில் எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-4)

## ஒலி பெருக்கி சாதனம் அன்பளிப்பு

(துன்னாலை)

கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்திற்கு பாடசாலையின் பழைய மாணவரான பாவு தம்பதியினரால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய ஒலி பெருக்கி சாதனமும் அவற்றுக்கான உபகரணங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செலவரத்தினம் மூலம் பாடசாலை அதிபர். இ.இராகவனிடம் இவை ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை, 150 அடி நீளமான பாடசாலை எல்லைச் சுவரினை பாடசாலையின் பழைய மாணவன் தி.யோகானந்தன் சுமார் 1 இலட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுத்துள்ளார். (ப-101)

## வெள்ளம்

(கோண்டாவில்)

கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வுப் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் அவ்வூர் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பகுதிகளில் உள்ள கழிவு நீர் கடலுக்குச் செல்வதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்த வாய்க்கால்கள் துப்பரவு செய்யப்படாது தூர்ந்து போய் உள்ளமையினாலேயே இவ்வாறு வெள்ளம் தேங்கி நிற்கின்றது. (ப-130)

★★★

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள குடியிருப்புகளுள் வெள்ளம் புகுந்துள்ளது.

இதனால், மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். (ப-130)

## நிதியொதுக்கீடு

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு திருக்கோணேஸ்வர ஆலய அபிவிருத்திப் பணிகளுக்காக நிதியொதுக்கீடு செய்துள்ளது.

அருள் நிலைப்பிரதேசத்தில் பஞ்சமுக லிங்கேஸ்வரர் சிலையை அமைப்பதற்கும் பக்தர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 15 இலட்சம் ரூபாவை ஒதுக்கியிருக்கிறார்.

இதற்கான முற்கட்ட நிதி கடந்த வாரம் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## பெயர் பலகைகள் நொருக்கப்பட்டன

(கோண்டாவில்)

உரும்பிராய் சந்தியில் அமைநதுள்ள புகைப்படக் கலையகம் ஒன்றினதும் அதற்கு அருகில் உள்ள தையல் அகம் ஒன்றினதும் பெயர்ப்பலகைகள், விளம்பரப் பலகைகள் என்பன கடந்த 13 ஆம் திகதி அதிகாலை இனம் தெரியாதோரால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

அதிகாலை வேளை மேட்டார் சைக்கிள்களில் வந்து இறங்கிய 10 பேர் கொண்ட குழுவே இவ்வாறு அடித்து நொருக்கியதாகத் தெரியவருகிறது.

மேலும், மேற்படி கடைகளுக்கு காவலுக்கு நின்ற காவலாளிகளை விரட்டி அடித்துவிட்டே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. (ப-130)

## நிவாரணப் பணிகளைவழங்க சிறப்புக் குழு அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் உள்ளூர் மற்றும் வெளியூர்த் தொண்டு நிறுவனங்கள் என்பன இணைந்தே அக்குழு நிறுவப்பட்டுள்ளது. வெள்ளததினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக விடுதலைப்புலிகளின திட்டமிடல செயலகத்தில் நேற்று விஷேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

அதில் உள்ளூர், வெளியூர் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை அனைத்து நிறுவனங்களும் இக் குழுவின் ஊடாக வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது. (ச)

## 'கலா சுரபி' வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

கற்றல், கற்பித்தல் தளங்களை மையமாகக் கொண்டு கல்வியியலின் பல்வேறு பக்கங்களையும் பலவடிவங்களில் எழுத்துருவாக உருவெடுத்திருக்கிறது யாழ்.தேசியக் கல்வியற் கல்லூரியின் 2004 ஆம் ஆண்டு வெளியீடான கலாசுரபி.

கல்வியற் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாத்திரமன்றி கல்வித் துறையில் ஈடுபாடுள்ள அனைவருக்கும் பயன்படக்கூடிய ஆக்கங்கள் பலவற்றைக் கொண்டு வெளிவந்துள்ள கலாசுரபி துலக்கல் 4 கற்றவர்களுக்கும், கற்பவர்களுக்கும் களிப்பளிக்கும் பயனுள்ள வெளியீடாமே. (து)

## கடனுதவி

(மருதங்கேணி)

நெல்லியடியில் உள்ள ஹற்றன் நஷனல் வங்கி கடற்றொழிலாளர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன்களை வழங்க முன்வந்துள்ளது.

முற்கட்டமாக வடமராட்சி கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழிலுக்குப் பாவிக்கப்படும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 13 பேருக்கு தலா 1 இலட்சம் ரூபா வீதம் இக் கடனுதவி வழங்கப்படவுள்ளது. (ப-35)

## பிணை மனுக்கள் நிராகரிப்பு

(துன்னாலை)

கப்புது பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 4 நபர்கள் சார்பாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் செய்யப்பட்ட பிணை மனுததாக்கலை பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் க.அரியநாயகம் நிராகரித்துள்ளார்.

இதனையடுத்து பிணை மனுதாரர்கள் யாழ்.மேல் நீதிமன்றில் செய்த மேல் முறையீட்டுப பிணை மனுவை ஆராய்ந்த மேல் நீதிமன்ற நிதவான் வரதராஜா இப்பிணை மனுவை ஏற்க முடியாது எனக் குறிப்பிட்டு அதனை நிராகரித்துள்ளார். (ப-101)

## யாழ்.மாவட்ட அரச அதிபராக ஜனவரி முதல் கே.கணேஷ்

(யாழ்ப்பாணம்)

வவுனயா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் எதிர்வரும் ஜனவரி மாதம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக இடமாற்றம செய்யப்படவுள்ளார்.

கடந்த 1994 ஆம் ஆண்டு முதல் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இவர் கடமையாற்றி வருகிறார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் உலக வங்கியின வடக்கு-கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்ட அதிகாரியாக உலக வங்கியால் நியமனம் செய்யப்பட்டுள்ளதை அடுத்தே இவரது இடத்திற்கு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ நியமனம் செய்யப்படவுள்ளார். (ந-5)

## தேர்வு முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு அலுவலகத்தில் 2001 ஆம் கல்வியாண்டிற்கான வணிக முதற் தேர்வின் முடிவுகள் கடந்த 9 ஆம் திகதி முதல் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு மீள் பரீட்சார்த்திகள் உட்பட 259 பரீட்சார்த்திகள தோற்றி 57 மாணவர்கள் இப் பரீட்சையில் சித்தி எய்தியுள்ளனர்.

அத்துடன், வணிகமாணி 2001 ஆம் கல்வியாண்டிற்குரிய பகுதி-I, பகுதி-II பரீட்சைகளின் முடிவுகளும் மிகவிரைவில் வெளியிடப்படவுள்ளன. (ந-19)

## எஸ். பி., ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்கிறார் திலக் மாரப்பன

(கொழும்பு)

சிறைத்தண்டனை அனுபவிக்கும் எஸ்.பி.திஸநாயக்க உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக முறைப்பாடு செய்ய முடியாதென ஐக்கிய தேசிய முன்னணி அரசில் பாதுபாப்பு மற்றும் போக்குவரத்து அமைச்சராகக் கடமையாற்றிய திலக் மாரப்பன தெரிவித்திருக்கிறார்.

இதனால் திஸநாயக்க ஜனாதிபதியிடம் பொது மன்னிப்பு கேட்பது அவசியமெனவும் மாரப்பன கூறியிருக்கிறார்.

இதேவேளை, ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர் குழு அளித்த தீர்ப்பின் காரணமாக எஸ்.பி.திஸநாயக்கவின் பாராளுமன்ற உறுப்புரிமை செல்லுபடியற்றதாக ஆக மாட்டாதென முன்னாள் நிதி அமைச்சர் கே.எம். சொக்ஸி தெரிவித்திருக்கிறார்.

உறுப்புரிமை நீக்கப்பட வேண்டுமானால் மூன்று நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

## எஸ்.பியை சிறையில் சந்திக்க 6 சட்டத்தரணிகளுக்கு அனுமதி

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறையில் தற்போதுள்ள எஸ்.பி.திஸநாயக்க விடுத்த வேண்டுகோளின பேரில், 6 சட்டத்தரணிகள் எஸ்.பியை சிறைசென்று சந்திப்பதற்கு சிறைச்சாலை நிர்வாகம அனுமதி வழங்கியுள்ளது.

அவரது வழக்குத் தொடர்பாக சட்டத்தரணிகள் அங்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெலிக்கடை சிறைச்சாலை ஆணையாளர் ருணரட்ன தெரிவித்தார்.

இதன்படி, கிழமை நாட்களில் ஒரு நாளில் 3 சட்டத்தரணிகள் திஸநாயக்கவை சந்திக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-6)



அண்மையில் உடுவில் இந்து இளைஞர் மன்றத்தில் நடைபெற்ற நாவலர் விழாவில் நிர்வாக உறுப்பினர் ம.தயாபரன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.
(படம்:- கல்வியங்காடு செய்தியாளர்)





உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த ஒளி விழா நிகழ்வில் பள்ளிச் சிறார்கள் நத்தார்த் தாத்தாவுடன் கூடி விளையாடுகின்றனர். அருகில் அதிபர் மு.விக்னேஸ்வரனும் காணப்படுகிறார்.

இந் நிகழ்வுக்கு வருகை தந்த வணபிதா பி.ஜே. அன்ரன பாலா அடிகளாருக்குப் பாடசாலை ஆசிரியர் அ.மாசிலாமணி மலர் மாலை அணிந்து வரவேற்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள் :- கோப்பாய் நிருபர்)

# வெள்ள அனர்த்தக் காட்சிகள்

## யாழ். குடாநாட்டில்...





மூளாயில்..

## கிளி.மாவட்டத்தில்...



கிளி-வட்டக்கச்சி வீதி




வட்டக்கச்சியில்...

## முல்லை மாவட்டத்தில்...



இரணைமடுக் குளம்



முல்லைத்தீவு வீதி

## ரணில், சபாநாயகர் ஹொங்கொங் பயணம

(கொழும்பு)

எதிாக்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க மற்றும் சபாநாயகர் லொக்குபண்டார ஆகியோா் ஹொங்கொங நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

எனினும், அவா்களின் விஜயம் குறித்த நோக்கம் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, பிரதம நீதியரசா் சரத் என் சில்வா மாநாடு ஒன்றுக்காக ஹொங்கொங் சென்றுள்ளதால் அவருக்குப் பதிலாக நீதியரசா் சிராணி பண்டாரநாயக்க பதில் பிரதம நீதியரசராக இரண்டு வாரங்களுக்குப் பதவிவகிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் சபாநாயகா் டபிள்யு.ஜே.எம்.லொகுகு பண்டார தமது பதவியில் இருந்து விலகி ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கு அந்த வாய்ப்பை வழங்கலாம என்ற தகவல் ஒன்றும் வெளியாகியுள்ளது.

ஆளும் கடசியின் முயற்சியை, பலத்தை முறியடிக்கவே இந்ததிட்டம் ஐக்கிய தேசியக் கட்சியால் வகுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. (க-4)

## மீசாலை சந்தியில் விபத்து இரு இளைஞர்கள் காயம்

(சாவகச்சேரி)

கடந்த 12ஆம் திகதி மீசாலை அல்லாரை வீதிச் சந்தியில் இடம்பெற்ற மினிவான் மோட்டார் சைக்கிள் விபத்தில் அராலி வடக்கைச் சேர்ந்த சச்சிதானந்தன் சந்திரசேகரன் (வயது 25) மற்றும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த நவரட்ணம் அருட்செல்வன் (வயது 20) ஆகிய இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

சாவகச்சேரிப் பகுதியில் இருந்து அல்லாரைக்கு திரும்பிய மினிவானும் கொடிகாமம் பகுதியில் இருந்து சாவகசசேரி நோக்கிவந்த மோட்டா் சைக்கிளுமே இவ் விபத்தில் சிக்கிக்கொண்டன.(ப-29)

### போரினால் பாதிக்கப்பட்ட

## தென்மராட்சி மக்களுக்கு புனர்வாழ்வளிக்கத் திட்டம்

தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் கனடா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கான கிளை அமைப்புகளின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பகுதியில் சில புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்தகால போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள், மற்றும் விதவைகளினது அபிவிருத்திகளை மையமாகக்கொண்டே இப்புனர்வாழ்வுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக முதற்கட்டமாக இக்கிளை அமைப்புகளால் 15இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் திட்டநடைமுறைகளுக்கு பயனாளிகளை தெரிவுசெய்யும் நடவடிக்கைகள், களப் பணிகள் என்பன தற்பொழுது இடம்பெற்று வருவதாகவும் இந்நிறுவனத்தினா் தெரிவித்தனர். (ப-16)

## வெள்ளம்

(புங்குடுதீவு)

யாழ்.குடாநாடடில் இரண்டு தினஙகளாக பெய்த கடும் மழையினால் புங்குடுதீவுப் பகுதியிலுள்ள வீதிகள், குளங்கள், ஒழுங்கைகள யாவும் வெள்ளம் நிரம்பிக் காணப்படுகின்றன.

இந்நிலையில் தொடாந்தும் மழைபெய்யும் நிலைமை ஏறபடுமாக இருந்தால் மக்கள் வாழ விடங்களை விட்டு இடம் பெயர வேண்டிய அபாய நிலைமை ஏற்படும். (ப-126)

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கரப்பந்தாட்ட நடுவா் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிா்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பதிவுசெய்யப்பட்ட 79 அங்கத்தவா்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங கத் தலைவர் க.யதுகுலசிங் கேட்டுள்ளாா். (ற)

## அருள் ஒளி வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துா்க்கா தேவி தேவஸ்தானததினரால் மாதாநதம் வெளியிடப்படும் "அருள் ஒளி" கார்த்திகை மாத இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. (க)

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கிழக்கில் 225 கரையோரக் கிராமங்கள் அபிவிருத்தி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கிழக்கில் 225 கரையோரக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. வடக்கு-கிழக்கு மாகாண சமுதாய கரையோர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இது முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிதியுதவி தொடா்பாக திருகோணமலையில் இயங்குகின்ற தொண்டர் நிறுவனங்களுக்கு விளக்கும் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட தொண்டா நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் முப. 1130 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுடன வடக்கு-கிழக்கு மாகாண சமுதாய கரையோர அபிவிருத்தித் திட்டதின் மாகாண பணிப்பாளா் ஏ.சி.குருஸ்,திருகோணமலைபணிப்பாளா் கதமிழ்ச்செல்வன், உதவிப் பணிப்பாளா வி.கௌரிதரன் ஆகியோா் கலந்து கொண்டனர்.

மாகாணப் பணிப்பாளா் குருஸ அங்கு உரையாற்றுகையில், கிழக்கு மாகாணத்தில் பொத்துவில் தொடக்கம் புல்மோட்டை வரையான கிராமங்கள் இத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளன. இவற்றில் 146 கிராமங்கள் அபிவிருத்தித்திட்டத் திற்கென அடையாளம் காணப் பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 2 மில்லியன் ரூபாய செலவில் அபிவிருத்தி செய்யப்படவுளளன. மீனவர்களின் அடிபபடைத் தேவைகள், பாலா பாடசாலைகள், சனசமூக மண்டபங்கள், களஞ்சிய வசதிகள் என்பன இத்திட்டத்தின் மூலமாக அபிவிருத்தி செய்யப்படும்.

இவற்றுக்கு மேலாக மட்டக்களப்பில் வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகம் அபிவிருத்த செய்யப்படும்.

திருகோணமலையில் குடாக் கரை மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும். குடாக கரை துறைமுகத்திற்கு 24 மணி நேரமும் மீன்பிடி படகுகள் சென்று வருவதற்கு கடற்படையினர் அனுமதி வழங்காத நிலைமை காணப்படுகின்றது. அத்துடன் இப்பிரதேசம் சுற்றுலாப் பகுதியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதால் இது பொருத்த மற்றதாக காணப்படலாம். இருப்பினும் 3 வருடங்களுக்குள் இத் திட்டத்தை இங்கு நடைமுறைபடுத்த முடியாது விட்டால் திருகோணமலை மீனவர்களின் நன்மைக்காக புடவைக்கட்டில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அபிவிருதத் செய்யப்படும் எனத் தொிவித்தார். இவற்றுக்கு புறம்பாக திரு கோணமலையில் மேலும் 25 கிராமங்கள் தலா 15 இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவா் தெரிவித்தார். இக் கிராம அபிவிருத்திகள் பிரதேசத்தில் இயங்கும் நிறுவனங்களின் துணையுடன் மேற்கொள்ளப்படுமெனவும், ஒவ்வொரு தொண்டா் நிறுவனங்களுக்கும் இவ் அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

## கண்சிகிச்சைக்கு வசதிசெய்து தருமாறு கோருகிறார் எஸ்.பி.

(கொழும்பு)

முன்னாள் அமைச்சா் எஸ்.பி.திஸநாயக்க சிறையில் இருந்துகொண்டு தனது கண்ணில் ஏற்பட்டுள்ள கற்றாக் நோய்க்கு சிகிச்சையளிக்கும் வசதி செய்துதருமாறு சிறைச்சாலை ஆணையாளர் தியகம் றாமி மர்ருத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ் வேண்டுகோள் கடந்த சனிக்கிழமை விடுக்கப்பட்டிருப்பினும், இன்னமும் இதற்கான பதில் கிடைக்கவில்லை என திஸநாயக்கவின் குடும்ப சட்டத்தரணி தெரிவித்தார்.

குடும்ப சட்டத்தரணியான கௌரிசங்கரி தவராஜா தான் சிறைச்சாலைக்குச்சென்று எஸ்.பியைச் சந்தித்ததாகவும் அங்கு வைத்தே எழுத்துமூல வேண்டுகோள் தயாரிக்கப்பட்டதாகவும் கூறினார்.

கடந்தவாரம் செவ்வாய்க் கிழமை திஸநாயக்க கைது செய்யப்பட்டவேளை, அவா தனியாா வைத்தியசாலை ஒன்றில் மேற்படி சிகிச்சைக்காகப் பதிவுசெய்திருந்தாா்.

இதேவேளை, எஸ்பிக்கு விதிக கப்படட தண்டனையை நீக்கும் வழிவகைகள் குறித்து அவரின சட்டஆலோசகர்கள் தீவிரமாக சிந்தித்துவருவதாகத் தெரிவிக் கப்படுகிறது. (ற-6)

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

10

## பாடல்கள்

1. நீள் பெருங் கோயிலும் நிகரில் கோபுரஞ்
சூழ்தரு நெடுமதில் சுடர்தன் காண்புறத்
தாழ்வகன் றிடுமறு கோடுந் தந்துகன்
நாளினின் கந்தவேள் தன்னை நயப்புடன்

2. செப்பரும் கும்பதா பனங்கள் செய்திடா
தொப்பிலா மறைமுறை யொளிரு நல்லருன்
வைப்பினா வாகன பதிட்டைத்தன்னை முன்
தப்பிலார்க் குமரவேள் தனக்குச் செய்தனள்

உக்கிரசிங்கராசனுக்கும் மாருதப்பிரவல்லிக்கும் கதிரைமலையிற் சோழ அரச பரம்பரை மரபிற்கமைவாக வெகு உற்சாகத்தோடும் விமரிசையாகவும் திருமணம் நடந்தேறியது. சிலகாலஞ்சென்றபின் மாருதப்பிரவல்லி தலயாத்திரை செய்து வரும்போது கோணேசகிரிக்குச் சென்று தீர்த்தமாடிக் கோணேசரரையும் தரிசித்து அங்குள்ள பூசகருக்குப் பட்டாடை முதலிய பரிசுகளையும் வழங்கி அவர்களது ஆசிகளைப் பெற்றாள். இப்படியே சென்ற சென்ற இடங்களெல்லாம் தான தர்மங்கள் செய்தும் மீண்டும் நகுலகிரிக்கு வந்து நெடுங்காலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமியாரை வணங்கி நல்லருள் பெற்றுக் கொண்டு கதிரைமலைக்கே றப்பட்டாள்.

## 08.கைலாய மாலையில் மாருதப்பிரவல்லி வரலாறு

இம் மாருதப்பிரவாகவல்லி வரலாறு கைலாயமாலையிற் சொல்லப்பட்டிருக்கிறது. அது வருமாறு

"உதய குல ராச னுதய மதி வாசன் கண்ணி
சிதைவின் மனு ராச வம்சதீரன்-துதையணிகள்
பாடுமல ராத்திபுனை பார்த்திவன் றன் சீர்த்தி முற்றும்
தேடுந்தனிக் கவிகைச் செம்பியர் கோ-னீடு கரைப்
பொன்னித் துறைவன் புலிக் கொடியன் பூவில் மன்னர்
மன்னனெனுஞ் சோழன் மகளொருத்தி- கன்னிமின்னார்
தேடுங்கடலருவித் தீர்த்தசுத்த நீரகத்து
ளாடிப் பிணி தணிப்ப தானினைந்து - சேடியர்தஞ்
சேவைகளுங் காவலுறு சேனையுமாய் வந்திறங்கிப்
பாவை யுறு தீர்த்தம் படிந்த தற்பி -னேர்வை பெறு
கங்குலுற வெங்குமிகு காவ லரண்பரப்பிச்
சங்கையுறு கூடாரந் தானமைத்து -மங்கை
விரிந்தசப்ர மஞ்சமெத்தை மெல்லணையின் மீதே
பொருந்துதுயி லாயிருக்கும் போது" -(கண்ணி கை.மா.4-10)

அப்பால் உக்கிரசிங்கன் வரலாறு நூலில்
".... சூர்ப்பகையை
மாற்றுங் குகன் குழகன் வாய்ந்தவடி-யார்துயரை
யாற்றுங் குமர னருளாலே- போற்றுதவர்
வாய்ந்த கதிரைமலை வாழு மடங்கல முகத்
தாய்ந்த நகராகத் தடலேறு -சாய்ந்து கங்குல்
போவதன்முன் னேகியந்தப் மோர் வேந்தன் மாமகடன்
காவல் கடந்தவனைக் கைப்பிடித்தே-ஆவலுடன்
கொண்டேகித் தன் பழைய கோலமலை மாமுழைஞ்சில்
வண்டார் சூழலை மணம் புணர்ந்து -உண்டான
பூவிளனு போகம் பொருந்திப் புலோ மசையுங்
காவலனும் போலக் கலந்திடுநாள" (கண்ணி 12-17)

சொல்லப்பட்டது. இந் நூல் வைபவமாலையின் முதநூலாதலின் வைபவமாலையார் வேறும் நூல்களிலும் இவர்கள் வரலாற்றைக் கண்டு விரித்தெழுதியிருத்தல் நிச்சயமே நிற்க.

## 09.உக்கிரசிங்கனின் தலைநகர் மாற்றம்

இது நிற்க, கதிரைமலையிலிருந்த உக்கிரசிங்கராசன் சில காலத்தின் செங்கடக நகரியை இராசதானியாக்கி அங்கிருந்து அரசாண்டு வருங்காலத்தில் மன்மதன் போன்ற ரூபமும் சர்வராசலட்சணங்களும் உடையவனாய்ச் சிங்கத்தின் வாலையொத்த வாலுடனே ஒரு குமாரனும் அவனுடனொரு பெண்ணும் பிறந்தார்கள். அவ்விருவருக்கும் உக்கிரசிங்கராசன் நரசிங்கராசனென்றும் சண்பகாவதி என்றும் பெயரிட்டான். அவன் அவர்களுக்கு விவாகம் நிறைவேற்றி நரசிங்கராசன் என்னும் பெயர் படைத்த வாலசிங்கனுக்கு முடிசூட்டி அரசாள வைத்து மரணமடைந்தான். வாலசிங்க மகாராசன் செயதுங்க வரராசசிங்க மென்னும் பட்டத்துடன் முடிசூட்டப் பெற்று அரசாட்சியை ஒப்புக்கொண்டான்" (வை.மா. பக்.22-23 கு. சபாநாதன் பதிப்பு)

இவ்வளவில் கதிரைமலை இராட்சியம் முடிந்து இனி இதனை அடுத்துச் செங்கடக நகர் இராச்சியம் ஆரம்பமாகிறது. உக்கிரசிங்கனால் மாற்றப்பட்டதும் சில காலம் உக்கிரசிங்கனால் ஆட்சி செய்யப்பட்டதும் பின்னர் அவன் மகனுக்கு முடிசூட்டப்பெற்று அவன் அரசாட்சி பண்ணியதும் அச் செங்கடக நகர்தான் அது எங்குள்ளது என்பது அடுத்த அதிகாரத்தில் காண்போம்.


### 10.இடப்பெயர்கள்

கீரிமலை, நகுலேசுவரம்,மாவிட்டபுரம் என்னும் இடப்பெயர்கள்:

**1. கீரிமலை:-** முற்காலத்திலே நகுலமுனி என்னும் ஓர் இருடி அங்குள்ள மலைச்சாரலிலே சில காலந்தங்கி இருந்து தீர்த்தமாடி வந்த பொழுது தன் முகத்துக்கிருந்த அங்கவீனம் நீங்கிப் போனதுகண்டு அத்தல விசேடத்தையும், தீர்த்த மகிமையையும் குறித்து வியப்புற்று அவ்விடமே தனக்குத் தவம் செய்தற்கேற்ற இடமென்று அம்மலைமுழைஞ்சிலே வாசம்செய்து கொண்டிருந்தார். அம் முனிவனுக்குக் கீரிமுகம் மாறிய காரணத்தால் அம்மலைக்குக் கீரிமலை என்பார்கள். நகுலம்=கீரி (யா.வை.மா)

**2. நகுலேஸ்வரம:-** நகுலமுனிவர் வந்து தங்கி அக்கீரிமலையில் தீர்த்தமாடி சுவாமி தரிசனம்செய்து வர அக்கீரிமுகம் மாறி அழகான மனித முகம் ஆகப் பெற்றவர் என்பது சரிதம் ஆகும். ஆகையால் அவர் தரிசனம்செய்த மூர்த்தி எழுந்தருளிய இடம்தான் நகுலேஸ்வரம். மூர்த்தி-நகுலேஸ்வரர்.

மேலும் இதன் விவரங்களை வேறு இடத்துக் காண்போம். மேலே காட்டப்பட்ட பெயர்களல்லாமல் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பிரதம குருக்களான து. ஷண்முக நாதக்குருக் கள் "குதிரை முகமாக விகாரமடைந்திருந்த இளவரசியின் முகம் மாறப்பெற்ற காரணத்தால் இவ்விடத்திற்குத் " துரகானன விமோசனபுரி" எனப் பெயரிடப்பட்டது. அக்காலத்திலிருந்தே இன்றும் இங்கு இக்கோவிலில் அனுஷ்டிக்கப்படும் பூசை வழிபாடுகளைக் கொண்ட பத்ததியொன்றில் இவ்விடம் "துரகானன விமோசனபுரே" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கீழ்வரும் சுலோகங்களாலறியலாம். *(தொடரும்)*











யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'கூட்டுறவு நகர்' நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இத் திறப்பு விழாவில் மங்கள விளக்கை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த வண.பிதா இராஜகுமார், யாழ். பள்ளி வாசல் மௌலவி அலாதீன் அஸாதீன் ஆகியோர் ஏற்றிவைப் பதையும்,யாழ். ப.நோ.கூ. சங்கத் தலைவர்சொலமன் சூ.சிறில் தலைமையுரையாற்றுவதையும், யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கூட்டுறவு நகரை நாடா வெட்டி வைபவரீதியாக திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:ஞா. ஐங்கரன்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவரின்

## சத்திரசிகிச்சை கற்றல் செயற்பாடுகள் ஒரு வார காலமாக இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திர சிகிச்சை கல்விச் செயற்பாடுகள் (Surgery Professorial Appointments) கடந்த ஒரு வார காலத்திற்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக பல்கலைக்கழக நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களது சத்திரசிகிச்சை கற்றல் செயற்பாடுகளை (Surgery Appointments) உடனடியாக ஆரம்பிக்குமாறு மருத்துவபீட மாணவர் ஒன்றியம பீடாதிபதி, துணைவேந்தர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சத்திரசிகிச்சை கல்வி செயற்பாடுகள் மீள் ஆரம்பிக்கப்படும் வரை மருத்துவ மாணவர்கள் அனைவரும் தமது எல்லாவிதமான கல்விச் செயற்பாடுகளையும் இடைநிறுத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (ற)

# வினைகள் தீர்க்கும் விநாயகப் பெருமான்



பிரம்மஸ்ரீ ந.பிரசாந்தசர்மா
உடுக்கியவளை விநாயகர் கோவில்
வட்டுக்கோட்டை

ஓம் என்ற பிரணவத்தில் இருந்து வேதங்கள் தோன்றின. அப்பிரணவமே எல்லாக் கடவுளுக்கும் பிறப்பிடம். உலகத்திற்கும் அதன் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் பிரணவ மந்திரமே காரணம். பிரணவ சொரூபியாய்த் திகழ்பவர் விநாயகப் பெருமான். இத்தகைய வித்தக விநாயகரின் உருவமும் பெரிது, மகிமையும் பெரியது.

விநாயகரின் தோற்றம் பற்றி தவராஜசீலர்களும, சிவனருட் செல்வர்களும் ஏற்றமுடன் எடுத்தியம்பியுள்ளனர். திருக்கைலாயமலையில் மந்திரசித்திர மண்டபததிறகுப் பார்வதியுடன பரமேஸ்வரர் எழுந்தருளினார். அங்கே ஏழுகோடி மந்திர சித்திரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றின் நடுவில் சமஷ்டிப் பிரணவம, வியாஷ்டிப்பிரணவம் என்ற இரு பரணவ மந்திரங்கள் இருந்தன. அந்த இரு பிரணவங்களையும் சிவமும் சக்தியும் திருக்கண் சார்த்தியருளினார்கள். அந்த இரு பிரணவங்களும் ஒன்றோடு ஒன்று மருவ, அப்பிரணவங்களிலிருந்து பிர ஓவாகார யானைமுகத்துடன விநாயகப்பெருமான் அவதரிததார். "பிடியதனொருவுமை கொளமிகு கரியது, வடிகொடு தனதடி வழிபடு மடியார் கடிகணபதி வர அருளினன்" என்ற கருத்தினைப பொருத்தமாக ஞானசம்பந்தக் குழந்தை கூறுகின்றார்.

உலகம் யாவையும் தம்முள் அடக்கியிருக்கும் தன்மையைக் காட்டும் பெரு வயிற்றின் திருவுருவமே பெருமானின் பேழை வயிறாகும். விநாயகரின் ஐந்து திருக்கரங்களில் மேலேயுள்ள வலக்கரம் அங்குசத்தையும், இடக்கரம் பாசத்தையும் கீழேயுள்ள வலக்கரம் ஒடித்த ஒற்றைத் தந்தத்தையும், இடக்கரம் மோதகத்தையும் தாங்கியுளளன. இதில் துதிக்கையான ஐந்தாவது கரம் வலம் சூழியாகவுள்ளது. இதனால் வலம்புரிவிநாயகர் என்றும் விநாயகருக்குச் சிறப்பு நாமம் உண்டு.

கணபதியின் திருமேனியானது இடைக்குக் கீழே பூத உடம்புடனும் இடைக்குமேல் கழுத்துவரையில் தேவ அல்லது மானுட உடலுடனும் அமைந்துள்ளது. கணபதிக்கமைந்த ஆணைமுகம் அஃறிணையையும், தேவ அல்லது மானிட உடல் உயர்திணையையும் சுட்டும். ஒற்றைக்கொம்பு ஆண் தன்மையையும், கொம்பில்லாப் பகுதி பெண தன்மையையும் சுட்டி நிற்கும். எனவே பூதமாய், தேவனாய், மானுடனாய், விலங்காய், ஆணாய், பெண்ணாய் உயர்திணையாய் அஃறிணையாய் இவையுள்ளிட்ட எல்லாமுமாய் விளங்குபவர் கணபதி என்பது உயத்துணரத்தகும்.

கணபதியின் திருவுருவத்தில் நாபிக்கமலம் நான்முகனையும் முகம் திருமாலையும் முக்கன் சிவனையும், இடப்பக்கம் சக்தியையும் வலப்பக்கம் சூரியனையும் குறிப்பதாகக் கொள்வர்.

தம்மை வழிபடுவோரின் இடர்களைக் களைவதுடன் அவர்கள் எடுக்கும் காரியங்களையும் கைகூட வைப்பவரும் விநாயகப் பெருமானே. கபிலதேவ நாயனார் தாம் அருளிச்செய்த மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை முதல் செய்யுளில் பின் வருமாறு பாடுகிறார்.

**"திருவாக்கும் செய் கருமம்**
**கைகூட்டும்செஞ்சொற்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும்**
**உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆணை**
**முகத்தானைக்**
**காதலால் கூப்புவர் தம்**
**கை"**

மேலும் இவர் ஐந்தாம் செய்யுளில் "**விநாயகனே வெவ் வினையை வேரறுக்க வல்லான**" எனவும் கூறுகிறார். பிறவித் துன பம் நீங்குவதற்கு "பாச நீக்கம்" அவசியம். உயிரின் சஞ்சித வினையை இறைவனே குருவாக வந்து நீக்கியருள்வான் என்பது சைவசித்தாந்த முடிவு.

பாசவினையைப் பற்றறுக்க வல்லவன் சிவன் ஒருவனே. சிவ அம்சம் பொருந்திய விநாயகப்பெருமானும் வினையை வேரறுக்க வல்லான் என்பதனால் சிவனின் வேறாகாதவர் விநாயகன் என்பது பெறப்படுகிறது.

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தனிப்பெரும் தெய்வமாக விளங்கும் விநாயகருக்கு சிறப்பு மிக்க விரதங்கள் பல. அந்த வகையில் பிள்ளையார் என்கின்ற

## நாளை விநாயக சஷ்டி விரதம்

இவ்விரதமானது கார்ததிகை மாதம கிருஷ்ண பட்சம் பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்கில பட்சம் சஷ்டிதிதி வரையில் 21நாள் அனுஷ்டிக்கபபெறும் விரதமாகும். "சட்டி தொட்டு சதயம் விட்டு" என்ற பழமொழியும் கூட இவ்விரதம் தொடங்கும் காலத்தையும், முடிக்கும் காலத்தையும் அறிவிக்கிறது. நோன்பு பூண்பவர்கள் 21 மையாலாகிய நூலைக் காப்பாக அணிதல்வேண்டும். 21நாட்களிலும் விநாயகருக்கு திருமஞ்சனம் முதலியவைகளைச் சிறந்த முறையில் செய்வித்து ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு விதமாக 21 வகையான பணியாரங்களை நிவேதித்தல் வேண்டும். முதல் 20 நாட்களிலும் ஒருபோது உண்டு, நியதியுடன் செயயாதன செய்யாமல் பிள்ளையார் கதையைப் பெரியோர்கள் சொல்லக் கேட்டுக்கொணடு எப்போதும தியானபரர்களாகவே நாட்களைக் கழித்தல் வேண்டும். இறுதிநாள் மட்டும் உணவொழித்திருந்து மறுநாட் காலையில் பாறணை செய்து விரதத்தை முடித்துக் கொள்ளுதல் மரபு.

ஆகவே இவ்விரதம் பொருநதிய சிறப்புமிகுந்தஇந்நனநாளில் விநாயகரைப் பூஜித்தும், அபிஷேகம் முதலியன அலஙகாரம, நைவேதனம் முதலான ஆராதனைகளைச்செயது நனமைகளை அடைவதோடு சாந்தியும் சமாதானமும் ஏற்பட எல்லாம்வல்ல ஸ்ரீ விநாயகரைப் பிரார்த்திப்போமாக.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்துவரும்"

# பஞ்சாப்பில் பயங்கர ரயில் விபத்து

# 50பேர் பலி; 150பேர் படுகாயம்

பஞ்சாப் மாநிலம், ஹோஷியார்ப்பூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பகல் 12மணிக்கு நடைபெற்ற ரயில் விபத்தொன்றில் 50பேர் பலியானதுடன் 150பேர் படுகாயமடைந்துள்ளனர். விபத்து பற்றிய விபரம் வருமாறு:



ஜம்முவில் இருந்து அஹமதாபாத் செல்லும் ஜம்முதாவி எக்ஸ்பிரஸ் ரயில், பஞ்சாப்பு மாநிலம் முகேதியன் அருகே சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராதவிதமாக அதே பாதையில் எதிரே மற்றொரு பாசஞ்சர் ரயில் வந்துகொண்டிருந்தது. மன்சார்ப் கிராமத்தின் அருகே 2 ரயில்களும் நேருககுநேர் பயங்கரமாக மோதிக்கொண்டன.

விபத்தில் பாசஞ்சர் ரயிலின் 3பெட்டிகளும், எக்பிரஸ் ரயிலின் ஒரு பெட்டி மறறும் இரு ரயில் எஞ்சின்களும் ஒன்றோடொன்று மோதி நொருங்கின.

இந்த விபத்தில் இரு ரயிலின் சாரதிகள் உட்பட 50க்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். 150பேர் காயமடைந்தனர். பலியானவர்களில் பெண்கள், குழந்தைகளும் உள்ளனர். காயமடைந்த அனைவருமே முகேரியன் மற்றும் அருகிலுள்ள மருத்துவமனைகளில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரயில் பெட்டிகளை உடைத்து தகவல் அறிந்ததும் ரயில்வே உயர் அதிகாரிகள், பொலிஸார் மற்றும் மாநில அரசதிகாரிகள் விரைந்துசென்று மீட்புப் பணியை முடுக்கிவிட்டனர். 'கியாஷ் வெல்டிங்' மூலம் ரயில் பெட்டிகளை உடைத்து உள்ளே சிக்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த பலர் மீட்கப்பட்டனர்.

ரயில்வே மருத்துவ குழுவினர் அவர்களுக்கு முதலுதவி சிகிச்சையளித்து மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைத்தனர். இராணுவத்தினரும் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். நேற்று முன்தினம் மாலைவரை 37பேர்களின் உடல்கள் மீட்கப்பட்டன.

விபத்து நடந்த பகுதியில் ஒரேயொரு ரயில் பாதை மட்டுமே உள்ளது. 'சிக்னல்' கோளாறு காரணமாக இந்த விபத்து நடந்திருக்கலாம என்று கருதப்படுகிறது. இரு ரயில் நிலையங்களுக்கு இடையே ஒரே பாதையில் இரு ரயில்கள வந்துவிடாமல் தடுப்பதற்கு 'டோக்கன்' முறை பயன்படுத்தப்படுவது வழக்கம்.

கடந்த இரண்டு நாட்களாக இந்தச் 'சிக்னல்'' முறையில் கோளாறு இருந்து வந்ததால், 'பேப்பர் லைன் கிளியரன்ஸ்' என்ற மாற்றுமுறை பயன்படுத்தப்பட்டு வந்தது. இதன்படி அடுத்தடுத்துள்ள இரு ரயில்நிலைய அதிகாரிகளும் ரெலிபோனில் தகவல் பரிமாறிக் கொள்வார்கள். இது ரகசியமாக நடைபெறும். ஆனால் விபத்து நடந்த இரு ரயில்நிலையங்களுக்கிடையே இந்த நடைமுறையில் கவனக்குறைவு ஏற்பட்டதால் ஒரேபாதையில் இரு ரயில்கள் வந்து விபத்து நடந்துவிட்டதாகத் தெரியவந்துள்ளது.

விபத்து நடந்தபோது ரயில்வே மநதிரி லல்லு பிரசாத் யாதவ், பாராளுமன்றத்தில் இருந்தார். விபத்து பற்றிய முதல் கட்டத் தகவல் அடங்கிய அறிக்கையைப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டு உடனடியாக அவர் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்தார். வபத்தில் உயிழந்தவர்கள் குடும்பத்துக்கு தலா 1லட்சம் ரூபாவும் காயமடைந்தவர்களுக்கு தலா 15ஆயிரம் ரூபா வீதமும உதவித்தொகையாக வழஙகபபடுமொன்று ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. (ப)



**கிறிஸ்மஸ் விழா இப்போதே உலகம் முழுவதும் பலவிதமாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஸ்பெயின் நாட்டிலுள்ள ஹுயலவா நகரின் சிற்றிகோலில் மணல் கொணடு பெத்லகேம் காட்சியை ஒரு சிற்பக் கலைஞர் உருவாக்கியுள்ளார்.**

**மாட்டுத் தொழுவத்தில் யேசு குழந்தையாக அவதரித்த காட்சியைச் சித்தரித்து இந்த மணல் ஓவியம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்வையாளர்கள் கண்டு வியந்தனர்.**

# மலேசியாவில் வெள்ளப்பெருக்கு

# 9பேர் பலி;12ஆயிரம் பேர் இடப்பெயர்வு

(கோலாலம்பூர்)

மலேசியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் கடும்மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 9பேர் இறந்தனர். 12ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

மலேசியாவில் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு கனமழை பெய்துள்ளது. ஒவ்வொரு ஆண்டிறுதியிலும் மலேசியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் கனமழை கொட்டுவதும், வெள்ளம் பெருக்கெடுத்தோடுவதும் வழக்கம். பருவமழை தீவிரமடைந்தால், பலரும் பாதுகாப்பிற்காக வீடுகளையும், கார்களையும் அப்படியே விட்டுவிட்டு ஓடிவிடுவர்.

பகாங், கேலான்தன் மற்றும் லெறங்காணு ஆகிய மாநிலங்களில் மழைநீர்வெள்ளம் சூழ்ந்தது. இதில் 4பேரைக் காணவில்லை.

இங்குள்ள தெனகா நேஷனல் மின் உற்பத்தி நிலையமும் மூடப்பட்டது. அதனால் 292 துணை மின் நிலையங்களும் மூடப்பட்டன. இதன் காரணமாக 10ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மின் வசதி இன்றித் தவிக்கின்றனர்.

மழை வெள்ளத்திற்குப் பலியானவர்களின் எண்ணிக்கை தற்போது 9 ஆக உயர்ந்துள்ளது. மழைநீர் சூழ்ந்துள்ள இடங்களில் நிவாரண உதவிகள வழங்கும் முகாம் அமைக்க அரசு முடிவு செய்தது. பள்ளிகள் மற்றும் அரச கட்டடங்களில் ஆயிரக்கணக்கானோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ப)




## சமையலறையைச் சுத்தமாக வைத்திருப்பது எப்படி?

சாதாரணமாக விடியற் காலையில் பெண்கள் சமையல கட்டுககுள புகுநதுவிட்டால் சுறு சுறுப்பாக பம்பரம் போல் சுழன்று கொண்டிருப்பார்கள். அதிலும் வேலைக்குச் செல்லும் பெண்கள் என்றால் சொல்லவே தேவையில்லை. ஆனால் திட்ட



மிட்டு வேலை செய்தால் சமயலறையைச் சுத்தமாகவும், அழகாகவும், வேலைகளைச் சுலபமாகவும் வைத்துக்கொள்ளலாம்.

சில சமையலறைகளில சமைக்கும் பாத்திரங்கள், தேநீர் குடித்த கோப்பைகள், சாப்பாட்டுத் தட்டுகள, குழந்தைகளுக்கு கொடுக்கும் மருந்துப் போத்தல்கள், கரண்டிகள் அங்குமிங்குமாக சிதறிக்கிடக்கும. சமையலறை மிகவும் அலங்கோலமாகக் காட்சிதரும்.

முதலில் சமையில் செய்யும்போது எடுத்த பொருட்களை எடுத்த இடத்தில் வைத்துவிட வேண்டும். உதாரணமாக காய்கறிகள் துப்பரவு செய்தவுடன் அதன் கழிவுப் பொருட்களை குப்பைபோடும் பையில் உடன் போட வேண்டும். முட்டையை சமையலுக்கு உபயோகித்தால் அதன் ஓட்டினை உரிய இடத்தில் உடனே போடவேண்டும. இப்படி அவ்வப்போது எடுக்கும் பொருட்களை அந்தந்த இடத்தில் வைத்துவிட்டால் நமது வேலைகள் குறையும். சமையலறையும் அழகாக இருக்கும்.

சமையலறை ஜன்னல் பக்கத்தில் சிறிய மணி பிளாணட் செடிகளை வளர்க்கலாம். அழகான பழங்கள் போட்ட படங்களை மாட்டலாம்.

சமையலறை வேலைகள் முடிந்தவுடன் சிறிது தண்ணீருடன் கிருமிநாசினி தெளித்துக் கூட்டிவிட்டால் சமையலறை இன்னும் சுகாதாரமாக இருக்கும். பெண்களால் முடியாதது ஒன்றுமில்லை.

## பயனுள்ள குறிப்புகள்

* உருளைக்கிழங்கு போன்றவற்றை எண்ணெய்க் கறியாக வதக்கும்போது, சாப்பிடும்வரை மொருமொருவென்று இருக்கவேண்டுமானால் உப்பு, காரம் போடாமல் ஒரு கிண்ணத்தில் வதக்கி எடுத்து மூடிவைத்துவிட வேண்டும். பரிமாறும்போது உப்புத்தூள், காரம் கலந்து உடனே சாப்பிட்டால் மொருமொருவென்று இருக்கும்.

* பிளாஸ்ரிக் கைப்பையை சுத்தமாக்கும்போது கொஞ்சம் சோப்புப் போட்டு சுத்தம் செய்துவிட்டுப் பின் துணியால் துடைத்து விட்டால் கைப்பை புத்தம்புதிதுபோல இருக்கும்.

## சமைத்துச் சுவைப்போம்

### சவ்வரிசி லட்டு

**தேவையான பொருட்கள்**



| | |
|---|---|
| சவ்வரிசி | 1/4Kg |
| சர்க்கரை | 1/4Kg |
| கஜு | 50g |
| ஏலக்காய் | 6 |
| நெய் | அளவுக்கு |

**செய்முறை:-**

முதலில் சவ்வரிசியை சிவக்காமல் வறுத்து பின் அதை மிக்ஸியிலோ, மிஷினிலோ மாவாக அரைத்துக்கொள்ளவும். சர்க்கரையை தூளாக்கவும். கஜுவை சிறுசிறு துண்டுகளாக்கி நெய்யில் வறுத்துக்கொள்ளவும். ஏலக்காயை தோல்நீக்கி தூளாக்கிக்கொள்ளவும். பின் சவ்வரிசிமா, சர்க்கரை, வறுத்த கஜு, ஏலக்காய்த்தூள் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அகலமான பாத்திரத்தில் கொட்டி நெய்யைக் காய்ச்சி மாவுக்குள் ஊற்றி நெய் சூடு ஆறுமுன் உருண்டைகளாகப் பிடிக்கவும். பின்பு அவற்றை எடுத்துப் பரிமாறலாம்.

*பின் குறிப்பு :- சிறிது பாலில் தேவையானளவு கேசரிப்பவுடர் கலந்து அதை மாவில் ஊற்றியும் உருண்டைகள் பிடிக்கலாம். இது பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.*

## யார் வழிநடத்துவது

சுய கட்டுப்பாட்டை இழந்து தறிகெட்டுப் போய்க் கொண்டிருக்கின்றது இந்தச் சமுதாயம். திருந்த மனமின்றி, திருத்துவார் யாருமின்றி, கொள்கை ஏதுமின்றி ஒரு வாழ்க்கை. சிறுவர்கள் குற்றங்கள் பெருகி வருகின்றன. அவர்கள் பார்வையில் பெரியவர்கள் எல்லோரும் தவறு செய்கின்றார்கள். வீட்டில், பாடசாலையில், ஊரில், நாட்டில் யாரும் உத்தமராக இல்லை. அவர்களைத திருத்த ஒரு முன்மாதிரி இல்லை. வழிநடத்திச்செல்ல நல்ல ஆசான் இல்லை.

இன்றைக்குப் பள்ளிக்கூடங்கள் வெறும் புள்ளிகளைப் பெற்றுத் தரும் பட்டறைகளே! ஆசிரியர்கள் தன்னிடம் பயிலும் மாணவர்களின் ஒழுக்கத்திற்கும, மேன்மைக்கும் நான் தான் பொறுப்பு என்று யாரும் எண்ணுவதில்லை. அப்படி எண்ண அவர்களுக்குத் தோன்றுவதுமில்லை. நேரமும் இருப்பதில்லை. பாடம நடத்துவதைத் தாண்டி, அந்த எல்லையைத் தாண்டி மாணவர்களின் பிரத்தியேக எல்லைக்குள அவர்கள் நுழைய விரும்புவதில்லை. எனவே தான் இன்றைய இளைஞர் சமுதாயம் சுயநலம் மிக்கதாக தான் மட்டுமே முன்னேற வேண்டும் என்ற துடிப்புடன் உள்ளது. முன்னேற வேண்டும் என்ற வெறியுடன் உழைக்கும் கூட்டம் ஒரு புறம்.

பெற்றோரின் வற்புறுத்தலுக்காகப் படித்துக்கொண்டிருக்கும் குறிக்கோளில்லாத, கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என அலையும் கூட்டம் ஒரு புறம், வாழ்க்கையின் அடித்தளத்தில் இருப்பதால் பள்ளிக்கூடத்தைப் புறக்கணித்துவிட்டு குழந்தைப் பராயத்தை குழந்தையாக இருக்கும்போதே தொலைத்து விட்டு நாலுகாசு பார்ப்பதால், பிஞ்சிலேயே பழுத்துவிடும் இரண்டுங்கெட்டான்கள் ஒருபுறம்.

யார்வழி நடத்தாவிட்டாலும் பரவாயில்லை. கெடுக்காமல்விட்டால் போதுமே. இக்கால திரைப்பட இயக்குநர்கள் கல்லூரி மாணவர்களின் இலக்கணமே தண்ணியும், சிகரெட்டும், சைட்டும என்று வகுத்து வருகின்றார்கள். எந்தக் கல்லூரியில் அவர்கள் காட்டுவது போல் கூத்தடிகின்றார்கள்? எங்கே ஆணும் பெண்ணும் சேர்ந்து கல்லூரி வளாகத்திலேயே ஆடிப்பாடுகின்றார்கள். தேர்வுகள் கழுத்தை நெருக்க 24 மணிநேரம் போதவில்லை பல மாணவர்களுக்கு. மாணவர்களுககு காதல் என்ற ஒன்றைத் தவிர வேறு சிந்தனையே இல்லாதது போல் காட்டி இருக்கின்ற நல்ல பிள்ளைகள் சிலரையும் கெடுக்கின்றார்களே!

நாடு கெட்டுப் போய்க் கொண்டிருக்கினறது எனபது தான் யதார்த்தமான உண்மை. இன்னும் மோசமாகப் போகப் போகினறது என்று ஆளாளுக்கு வீணே புலம்பிக்கொண்டிருப்பதற்குப் பதில் இந்த நிலைமையைச் சீர்செய்ய என்ன செய்யலாம என யோசிக்க வேண்டும்.

நம் புனர்நிர் மாணப் பணி யை எங்கே, யாரிடமிருந்து ஆரம்பிககலாம் என்று யோசித்துப் பார்ததால், தாயின் வயிற்றுக்குள் கரு உருவான அந்த நிமிடத்திலிருநதே ஆரம்பிக்க வேண்டும். வெளியுலக மாசு படுவதற்கு முன்பிருந்தே, அதாவது ஒரு பெண் தாயான முதல் மாதத்திலிருந்து அவள் அக் குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை அவளின் கடமை மகத்தானது.



அந்த ஒன்பது மாதங்களும், அவள் தனக்காக வாழாமல் இந்த தேசத்திற்கு ஒரு நல்ல மகனை, மகளை பெற்றுத தரவேண்டும் எனறு எண்ணவேண்டும்.

## இவர்களை?

பணம் படைததவர்களோ, இல்லாதவர்களோ எல்லார் வீட்டிலும் பிரச்சினைகள் இருக்கத் தான் செய்கன்றது. குழந்தை உண்டான பின் மகிழ்ச்சியாக இருப்பவர்கள் வெகு சிலரே. பணமில்லாமல் சிரமபபடுபவர்கள்... வேலை நிமித்தம் கஷ்டப்படுபவர்கள்.... தேவையில்லாத குழந்தையை சுமக்கின்றோமே என எண்ணுபவர்கள்..... இவர்கள் எல்லோரும் சந்தோசமாகவா இருக்கின்றார்கள்?

கருவுற்ற பெண்களுக்கு முழுப் பாதுகாப்பும் அன்பும் கிடைக்க ஆவன செய்யவேண்டும். அனபான, அழகான, அமைதியான நிம்மதியான சூழலில் அவர்கள் இருந்தால்தான் ஒரு இசையைக் கேட்கவோ, ஒரு நல்ல புத்தகத்தை வாசிக்கவோ அவர்களுககுத் தோன்றும். வாழ்க்கையே தினமும் ஒரு பெரிய போராட்டமாக இருக்கும போது வயிற்றில் வளர்ந்து வரும் ஜீவனைப் பற்றி சிந்திக்க நேரம் ஏது பலருக்கு?

எனவே இதுகுறித்து ஒரு சமூக விழிப்புணர்வு மக்களிடையே தோன்றவேண்டும். இந்தக் கால கட்டத்தில்தான் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதை குடும்பத்தினர் உணருமாறு ஊடகங்கள் வாயிலாக அறிவுறுத்தவேண்டும்.

குழந்தைகளின் நிறை கூடவேண்டுமென்று உடல் வளர்ச்சியைப் பற்றி கவலைப்படும் தாய்க்குலம், ஒழுக்கமான வளர்ப்பைப் பற்றிக் கவலைப்படுவதிலலை. பெரும்பாலும குழநதைகள சாப்பிடுவதேயிலலை என்றுதான் மருத்துவரிடம் குறைபடடுக் கொள்கின்றனர். ஆனால் அதன் உள வளர்ச்சியைப் பொருட்படுத்துவதில்லை. 'ஈன்று புறந்தருதல் மட்டும் தாயின் கடன், சானறோனாக்குதல் தந்தைக்குக் கடன' என்றெல்லாம் பிரித்துப் பார்க்காமல் பெற்றோர் இருவரும் வளர்பபில் அககறை எடுததுககொளள வேண்டும்.

தாய்க்கு நல்ல எண்ணம், நல்ல சிந்தனை, தூய ஒழுக்கம, நிறைந்த மகிழ்சசி இவை இருந்தால் தாயின் உடலைப் போலவே, உள்ளத்தைப் போலவே கருவில இருக்கும் சிசுவும் ஆரோக்கியமாக இருக்கும். கருவுற்ற பெண்களுக்கு நல்ல ஓய்வும், சத்தான உணவும் எப்படி முக்கியமோ, அவ்வளவு முக்கியம் அவளுடைய உள ஆரோக்கியமும்.

பேறுகாலம் வரை இவர்கள் மகிழச்சியுடன் இருகக வேண்டும். எனவே அழகான காட்சிகளைப் பார்க்கட்டும். நல்ல இசையைக் கேட்கட்டும். நல்ல வார்த்தைகள் செவிகளில் விழட்டும். பிறக்கும் போதே அதன் மூளையில் நல்லன மட்டுமே விழுந்திருக்க வேண்டும். அந்த ஒன்பது மாதங்களும், ஒரு நல்ல குடிமகனை, குடிமகளை ஈன்றெடுக்கச் செய்யும் மாபெரும் தவமாக, வேள்வியாக இருக்க வேண்டும்.

*-தங்க மங்கை*

**பெண்கள்' வளர்ச்சி அதிக**

ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகள் சீக்கிரமாக நடக்கும். சீக்கிரமாகப் பேசிவிடும். இது எப்படி சாத்தியமாகிறது! என்று அயர்லாந்து நாட்டு மருத்துவ ஆராச்சியாளர்கள் சோதனை நடத்தினார்கள். அப்போது கருவில் இருக்கும்போதே ஆண் குழந்தைகளைவிட பெண்குழந்தைகள்தான் அதிகளவில் அசைந்து வாயசைப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. அதோடு கருவுருவாகும்போது எல்லாம் பெண கருக்களாகத் தான் இருக்கும். அதனுடன் 'ஆண்ட்ரோ ஜென்ஸ்' சேர்ந்தால்தான் அது ஆண் குழந்தையாக மாறும் என்பதை உறுதிசெய்துள்ளனர்.

# வேலைக்குச் செல்லும் பெண்களின் பிரச்சினைகளும் தீர்வுகளும்

(தொடர்ச்சி...)

பெரும்பாலான பெண் பிள்ளைகள் க.பொ.த (உயர் தரம்) வரை கல்வித்தகமை பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு" என்ற மனப்போக்கு மாறிவிட்டது. பெண்களின் பெற்றோருக்கும் "அவளும் நன்றாகப் படித்தால் தான் பிற்காலத்திற்கு நல்லது" என்ற நவீன சிந்தனை ஏற்பட்டுவிட்டது. இதனாலும் பெண்கள் படித்து வேலைக்குப் போய்வர விரும்புகின்றனர். தங்களது எதிர்காலம் பாதுகாப்பானது என்ற வகையில் ஒரு நல்ல வேலையிலிருப்பது தங்களுக்கு முதன்மையானது எனக் கருதுகின்றனர்.

வேலைக்குச் செல்லும் பெண்கள் சாலைகளில் செல்லும் போதும், பேருந்து, புகைவண்டி ஆகியவைகளில் செல்லும் போதும் மற்றவர்களின் கண்களுக்கு விருந்தாகின்றனர். பேருந்துகளில் சனங்கள் நிரம்பி வழியும் நேரங்களில் அவர்களை இடித்துத்தள்ளும் ஆண்களும் நம் சமுதாயத்தில் உள்ளனர். அந்நேரங்களில் பெண்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியமானது. போக்குவரத்துகளில் குறும்பு செய்யும் ஆண்களைச் சமாளிக்ககூடியவராகவும் இருததல் வேண்டும்.

இவ்வாறான சில பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக அலுவலகம் முடிந்ததும் வீடு செல்லவேண்டும். மக்கள் நடமாடும் வேளைகளில் தம் பிரயாணங்களைச் செய்யவேண்டும். மூன்று பெண்களாவது பேருந்துகளில் சென்று வீடு செல்வது நல்லதாகும. அவசியமான நகைகள் மட்டும் அணியவேண்டும்.

அலுவலகங்களில் பெண்கள் வேலைக்குச் செல்லும் போது மிக அவதானமாக இருக்கவேண்டும். மேலதிகாரியான ஆணின் பார்வையும், மனப்போக்கும் வேறுபட்டுக் காணப்படலாம். சில வேளைகளில் தனிமையான அலுவலக அறையும் அனுகூலமாக அமையலாம். இவ்வாறான நேரங்களில் ஒட்டியும் ஒட்டாமலும் பழகவேண்டும்.

இளம் பெண்கள் வேலைக்குச் செல்லும்போது தங்களது நன்மதிப்பையும், ஒழுக்கத்தையும் கவனமாகப் பேணிக் கொள்ளவேண்டும். அவர்கள் வெளியிலே பலருடன் பழகும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதனால் அப்போது ஆண்களால் ஏற்படுகின்ற ஆபத்துக்கள், குறும்புகள் ஆகியவற்றைச் சகிக்கின்ற மனப்பாங்கு ஏற்படவேண்டும்.

லும் பெண்களே எனக் கூறலாம்.

வேலைக்குச் செல்லும் பெண்களுக்குப் பொருளாதார நெருக்கடி குறைவு. அவர்களுக்கு வருமானம் கூடுகின்றபோது, அவர்களது வாழ்க்கைத்தரமும் உயர்வடைகின்றது. இவள் தனது உரிமைகளை வற்புறுத்தத் தொடங்குவாள். மற்றவர்களுடன் விட்டுக்கொடுக்கும் மனப்பானமை உடையவளாகக் காணப்படமாட்டாள். இதனால் தன் கருத்துக்களுக்கு இசைவு பெறுவதற்காகக் கணவனோடும், பிறரோடும்

மல் விடுவதன் மூலம் (மௌனம் சாதிப்பது) பிரச்சினைகளைச் சமாளிக்கலாம்.

பொருளாதாரக் கவலைகள் இல்லாதவர்கள் ஓரளவு தாராளமாகப் பணச் செலவு செய்து மகிழ்ச்சியுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் வேலை செய்யும் நண்பிகளோடு லவு நாட்களில் பூங்காக்கள், கடற்கரை, சினிமாக் கொட்டகை எனத் தமது பொழுதைக் கழிப்பார்கள். இதனால் மற்றவர்களின் பார்வைக்குத் தாங்கள் இலக்காகின்றனர் என்ற எண்ணம் இல்லாதவர்களாகின்றனர்.


வசதியில்லாத குடும்பப் பெண்கள் வீட்டுப் பொறுப்புக்களையும் தாங்கிக்கொண்டு வேலைக்குச் சென்றுவரவேண்டும். வேலைக்குச் சென்று களைத்துத் திரும்பி வரும் போது விட்டுப்பிரச்சினைகளும், குடும்பப் பொறுப்புக்களுமே முன்னுக்கு நற்கும்.

மீண்டும் அதிகாலையிலே எழுந்து வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும். எல்லா வேலைகளையும் முடித்து வெளியே வரும் போது களைப்பு ஏற்பட்டிருக்கும். பின்பு பேருந்தைப் பிடித்து வேலைக்குச் செல்கின்றனர். இந்நேரங்களில் அப்

மணம் முடித்து 5 வருடங்களாகக் குடும்பம் நடத்தி வந்தாள். கணவன் தனது வேலைகளைச் செய்து முடித்தபின் நன்றாக மதுபானம் குடிபபவரானார். இவர்களுக்கு 2 ஆண் பிள்ளைகளும் உண்டு. கணவன் மதுபோதையில் வந்து மனைவிக்கு இரவு நேரங்களில் நன்றாக அடித்தார். இந்தச் செயலையும் ஆசிரியை 2 ஆண்டுகளாகப் பொறுத்தார். அதன்பின் கணவனை விவாகரத்துச் செய்துகொண்டார். தற்போது இந்த ஆசிரியை தனயாகவே குடும்பத்தை நடாத்திவருகிறார். இவ்வாறான செயலுக்கு முக்கிய காரணமாக விளங்குபவர் கணவனேயாகும். அவர் தனது செயலை மாற்றியிருந்தால் இந்நிலைமை ஏற்பட்டிருக்காது.

பொதுவாக வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கள் தங்கள் பகுதிகளில் சிறு சிறு சங்கங்களை அமைத்துக்கொள்ளலாம். அதாவது தங்கள் பிரச்சினைகளுக்குத் தாங்களே தீர்வுகாணலாம். இதன்மூலம் தற்போதைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப வாழலாம். இவர்களுடைய நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பெண்களுக்கான சங்கங்களை உருவாக்கவேண்டும். இவை பரஸ்பர நலன்புரிச் சங்கங்களாக அமைவதும் சிறப்பம்சமாகும்.

எனவே வேலைக்



ஒருவன் தன்னோடு வேலை செய்கின்ற இளம் பெண்களோடு சிரித்துக் கதைத்து மகிழ்வடைவான். ஆனால் தனது மனைவியோடு அவள் வேலை பார்க்கும் அலுவலகத்தில் ஆண்கள் பழகினால் அதனைப் பொறுத்துக்கொள்ளமாட்டான். நடுத்தர வயதுப் பெண்களின் கணவன்மாரும் இப்படித்தான் நடந்து கொள்கின்றனர்.

பெண் வேலைக்குச் செல்வது பொருளாதாராதியில் நன்மையானது என எடுத்துக்கொண்டாலும், சமுதாயம் அவளது ஒழுக்க நடவடிக்கைகளில் கவனமாக உள்ளது என்பது முக்கியமான அம்சமாகும். இந்த வகையில் பாதிக்கப்படுகின்றவர்கள் வேலைக்குச் செல்

போராடுகின்றவளாகக் காணப்படுகிறாள்.

வேலைக்குச் செல்லும் மனைவிக்கும், கணவனுக்குமிடையே சில சந்தர்ப்பங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதாவது, கணவனைவிட மனைவி உயர்ந்த பதவிகளை வகித்தல் ஆகிய நிலைமைகளில் பிரச்சினை ஏற்பட இடமுண்டு. இந்த நிலைமைகளில் மனைவி அடக்கமான மன உணர்வுள்ளவளாக மாறவேண்டும். அதற்காகத் தனது கணவனுடன் வாதம் செய்யக்கூடாது. அவற்றை மற்றவர்களுக்குக் கூறா

பெண்ணிற்கு வீட்டிலுள்ளவர்கள் அவளது வருமானத்தில் வாழ்கிறோம் என்பதை நினைத்து வேலைகளில் உதவி செய்துகொடுக்கலாம்.

இவ்வாறு வீட்டிலும், வேலைத்தளத்திலும் மாறி மாறி வேலை செய்வதனால் இப் பெண்கள் சோர்ந்து விடுகின்றனர். ஆண்களுக்கு இந்தக் கவலைகள் இல்லை. அவர்கள் வீடு சென்றதும் ஓய்வு கிடைக்கின்றது எனவும் மனம் வருந்துகின்றனர்.

ஒரு பட்டதாரி ஆசிரியை. இவள் ஒரு தோட்டக்காரனை

குச் செல்லும் பெண்களுக்குப் பிரச்சினைகள் இல்லாமல் இல்லை. தங்கள் சூழ்நிலைகளுக்கும், வேலைகளுக்கும், வேதனத்திற்கேற்பவும், முன்யோசனையுடனும், அறிவாற்றலுடனும், அனுபவத்துடனும் வெற்றி காண்பதே சிறப்பானதாகும்.

**ஆ. முருகதாஸ்**
**ஆசிரியர்**

இதற்குப் பெணகளுக்கு மன உறுதி அவசியமானதாகும்.

(முற்றும்)

# கொலை முயற்சி வழக்கில் தமிழ் இளைஞர் கனடாவில் கைது

(கொழும்பு)

கொலை முயற்சி வழக்கில் தேடப்பட்டுவந்த ஈழத்தமிழரான 'ஹெல்மட்' தவா என்பவர் கனடியப்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கனடிய 'நஷனல் போஸ்ட்' பத்திரிகையின் இணைத்தளம செயதி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜுன் மாதம் கனடாவில் வடக்கு மொன்றியலில ஈழத்தமிழ் இளைஞர் குழுக்கள் கத்தி, வாள் பொல்லுகளுடன் மோதிக் கொண்ட சம்பவத்தில் கொலை செய்ய முயற்சித்தார் என்ற சந்தேகத்தின் பெயரில் சம்பந்தப்பட்ட நபர் தேடபபட்டுவநதா என்றும், கடந்த ஆறு மாதங்களாக கனடியப் பொலிஸாருககு தண்ணி காட்டி வந்த இவர், கடந்த வியாழக்கிழமை தமக்குக்கிடைத்த இரகசியத் தகவலின்படி இவரது வீட்டில் வைத்தே கைதுசெய்யப்பட்டார் என்றும் கனடிய குடிவரவுப் பிரிவுக்கான விசேட அதிரடிப்படையினர் அறிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட சம்பவத்தில் ஈழத்தமிழ் இளைஞர் குழுக்களைச் சேர்ந்த 7பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றும், ஹெல்மட் தவா செல்வராஜா (24 வயது) என்பவரும, கொலின் செலலத்துரை (வயது 31) என்பவரும் சம்பவ இடத்தில் தப்பிவிட்டதால் பொலஸார் தேடிவந்தனர் என்றும் கொலின செல்லத்துரை என்பவர் இன்னமும் தேடப்பட்டு வருகின்றார் என்றும் கனடியப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

1990ஆம் ஆண்டு முதல கனடாவில் கோஷ்டி மோதலகளில் ஈடுபட்டுவந்த விவிரி மற்றும் ஏ.கே.கண்ணன் குழுக்கள் தற்போது ரொறன்றோ, மொன்றியல், வன்கூவர் பகுதிகளில் உள்ளனர் என்று புலனாய்வுத் துறை மூலம் கிடைத்த தகவலையடுத்து கனடியப்பொலிஸார் தமது நடவடிககைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

(க-4)

கத்திக் குத்துக்கு இலக்கான

# வைத்தியர் நரேந்திரன் மீது பாலியல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரப்ல இருதய வைத்திய நிபுணர் எஸ்.நரேந்திரனை கத்தியால் குத்திக் கொலைசெய்ய முயனறாா எனற முறைப்பாட்டின் பேரில் பொறளை பொலிஸாா, அமைச்சர் ரோகித்த போகொல்லாகமவின் மனைவி தீப்திக்கு எதிராக கொழும்பு பிரதான நீதிவான் நதிமன்றில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

அதேசமயம் அமைச்சரின் மனைவி தீப்தி, பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயனறாா எனற முறைபபாடடின் பேரில் வைத்திய நிபுணர் எஸ்.நரேந்திரனுக்கு எதிராகவும் பொறளை பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இவ்விரு வழக்குகள் தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி இடம்பெறும் என அறிவித்த நீதிமன்றம், அமைச்சரின் மனைவி மற்றும் வைத்திய நிபுணர் எஸ். நரேந்திரன் ஆகிய இருவரையும் எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதி நீதிமன்றில ஆஜராகுமாறு அழைப்பானை விடுததுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வைத்திய நிபுணர் எஸ்.நரேந்திரன் அமைச்சரின் மனைவி தீப்தி தன்னை கத்தியால் குத்தி கொலைசெய்ய முயன்றதாக பொறளை பொலிஸில முறைப்பாடு செய்திருந்தார்.

அதேபோல அமைச்சரின் மனைவியும் வைத்திய நிபுணர் எஸ்.நரேந்திரன் தம்மை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றதாக இதே பொலிஸில முறைப்பாடு செய்துள்ளார். (க-5)

# முகாமைத்துவ சூழல் அமைப்பின் மூலமே நிலையான சமாதானம் உருவாகும்

## சமாதான நோபல் பரிசைவென்ற வன்கரி மாத்தாய் உரை

ஆபிரிக்கா கண்டத்திலே கடந்த மூன்று தசாப்தங்களாக 30மில்லியன் மரங்களை நாட்டி



பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி யமைக்கான கென்யா நாட்டின் சுற்றுச்சூழல் பகுதியின் பிரதி அமைச்சரான திருமதி வன்கரி மாத்தாய் என்பவருக்கு 2004 ஆம் ஆண்டுக்கான நோபல் சமாதானப் பரிசு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பணியின் மிகவும் உயர்ந்த பணியை மேற்கொண்டிருந்தமைக்காக வழங்கப்பட்ட முதலாவது மிக உயர்ந்த பரிசாக இது கணிக்கப்படடுள்ளது.

ஒஸ்லோவின் நகர மண்டபத்தில் நோர்வே நாட்டின் அரசர் ஹரஸ்ட் பங்கு கொண்ட இவ் வைபவத்தில் நோபல் பரிசுத் திட்டக் குழவின் தலைவாரான மிஜோஸ், திருமதி வன்கரி மாததாய் (வயது 64)க்கான 1.4 மில்லியன் அமெரிக்க டொலருககான காசோலையையும், நோபல் பரிசுக்கான டிப்ளோமா மற்றும் தங்கப்பதக்கத்தையும் வழங்கி வைத்தார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணிகளு அரும்பெரும் சேவையை மேற்கொண்ட திருமதி வன்கரி மாததாய் அங்கு உரையாற்றும போது,

நாட்டில் நியாயமான நேர்மையான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படாவிடின் உண்மையான சமாதானம் ஏற்படமாட்டாது. ஜனநாயக சூழலில் நிலைத்து நிற்ககக்கூடிய முகாமைத்துவச் சூழல் அமைப்பின் மூலம் தான் சமாதானத்துக்கான அடித்தளத்தை அமைக்க முடியும். உலகில் சமாதானத்தை நிலவச் செய்வதற்கு சுற்றுச் சூழல் பாதுகாப்பு அபிவிருத்தித்திட்டமானது இன்னுமொரு முக்கிய அம்சமாகும்.

சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பணிக்கும் அமைதிக்கும் இடையில நெருக்கமான தொடர்புகள் உள்ளன. இந்த வகையில் நிலம், நீர் மற்றும் தானியங் களுக்கிடையில் இறுக்கமான தொடர்புகள உள்ளன என்பதை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

எமது. சுற்றுச் சூழல் பாதிப்படையும் போதும் பிழையான முறையில் முகாமைத்துவம் செய்யப்படும் போதும் எமது எதிர்கால சந்ததியின் வாழ்க்கையும், வாழ்க்கைத்தரமும் அழிக்கப் படுகின்றது. காடுகள் அழிக்கப படுவதால் உலகில் சுற்றுச் சூழல் வெகுவாகப் பாதிப்படைகின்றமை மிகவும் வேதனைக் குரியது எனக் குறிப்பிட்டார்.

திருமதி வன்கரி மாத்தாய் நைரோபி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஆவார். நோபல் சமாதானப் பாிசு பெறும் 12 ஆவது பெண் இவர் என்பதுடன், இப்பரிசினைப் பெறுகின்ற முதலாவது ஆபிரிக்கப் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

## தென்மராட்சி உசன் பிரதேச

# தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு படைத்தரப்பு விஷேட அனுமதி

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் யாழ்.மாவட்ட தென்னந்தோட்ட உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த திங்கட்கிழமை விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகப் பணிமனையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, யாழ்.மாவட்டத்தில் உள்ள தெனனந்தோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், தத்தமது தென்னந்தோட்டங்களில் தேங்காய்களைப் பறிப்பதற்கு அனுமதி தருமாறும் இந்தக் கலந்துரையாடலின் போது தோட்ட உரிமையாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கமைய உசன் பிரதேசத்தில் உள்ள தென்னந்தோட்ட உரிமையாளர்கள். அப்பிரதேச கிராம உத்தியோகஸ்தரின் சிபார்சுடன், இராணுவத்தினரின் அனுமதியுடனும் தொழிலாளர்களை ஈடுபடுத்தி தேங்காயகளைப் பறிப்பதற்கும், அதிலிருந்து பலாபலன்களைப் பெற்றுக்கொள்ளவும் இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது 55 ஆவது சேனையகத்தின் கட்டளையிடும் அதிகாரி மற்றும் தென்னை அபிவிருத்தி சபையின் தலைவர் ஏ.நல்லதம்பி உட்பட உயர் அதிகாரிகள் பலரும கலந்துகொண்டனர். (ற)

# குண்டுத்தாக்குதலின் எதிரொலி சுற்றுலாத்துறையில் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கைக்கான சுற்றுலாப் பயணத்தைப் பல இந்திய உல்லாசப் பயணிகள் இரத்துச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த சனிக்கிழமை இந்திய நட்சத்திரங்கள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சியில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்தே, இலங்கைக்கான தமது சுற்றுலாப் பயணங்களை இவர்கள் ரத்துச் செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்திய நட்சத்திரங்கள் கலந்து கொண்ட நிகழ்வல் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலையடுத்து பல வெளிநாட்டவர்கள் இலங்கைக்கான தமது சுற்றுலாப் பயணத்தை ரத்துச் செய்துள்ளதாகவும் இதனால சுற்றுலாத்துறையில் பெரும் தாககத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உலகத் தமிழர்கள் உதவவேண்டும்

## தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அவசர வேண்டுகோள்

(கிளிநொச்சி)

தமிழர் தாயகத்தில் பெரு வெள்ளத்தால் அழிவுகளைச் சந்தித்து பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகியுள்ள ஒரு லட்சத்திற்கும் மேறபட்ட மக்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்க முன்வருமாறு புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவசர வேண்டுகோளை விடுத்திருக்கினறது.

கடந்த 4 நாட்களாக தமிழா தாயகததில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

தம் வசிப்பிடங்களை இழந்து பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் இந்த மக்கள் தங்கியிருக்கின்றனர். இவர்களுக்கு இலங்கை அரசினது புனர் நிவாரண நிர்வாகஙகளில் இருந்து இதுவரை எந்தவித உடனடி உதவிகளும் வழங்கப் படவில்லை. தமிழர் தாயகப் பகுதி என்ற காரணத்தினால் இலங்கை அரசினால் அசமந்தம் காட்டப்படுகின்றது.

எனவே, வெள்ளத்தால் அழிவுகளை சந்தித்து அவலப்படும் எமது மக்களுக்கு உடனடியாக அவசர உதவிகள் தேவைப்படுகின்றன இதனால் அவலப்படும் எம் உறவுகளுக்கு உதவ புலம் பெயர் வாழ் தமிழ் உறவுகள் முன்வரவேண்டும்.

நிதி, உடைகள் உள்ளிட்ட வகைகளில் புலம்பெயர் வாழ் தமிழ் உறவுகள் தத்தமது நாடுகளில் உள்ள தமிழர் புனர்வாழவுக்கழகக் கிளைகளில் உதவிகளை கையளிக்கலாம் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேலும் கேட்டுக் கொண்டுள்ளது.

மட்டக்களப்பில் 68 ஆயிரம் பேரும், அம்பாறையில் 40 ஆயிரம பேரும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய தமிழர் தாயக மாவட்டங்களில் இதே அளவு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவிகளை வழங்குவதில் தற்போது தமிழர் புனர் வாழ்வுக் கழகம் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# எல்.பி.காஸ் விற்பனையில் மலேசியாவும் ஈடுபடும் ?

(கொழும்பு)

உளளூர்ச் சந்தையில் எல்.பி. காஸ் விற்பனையில் மலேஷிய நிறுவனம் ஒன்று ஈடுபடுவது தொடர்பாக பரிசீலனை செய்து வருகின்றது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அந் நாட்டைச் சேர்ந்த முன்னணி எரிபொருள் விநியோக நிறுவனம் ஒன்றின் பிரதிநிதிகள் சிலர் நேற்று முன்தினம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் எம்.ஐ.எம்.மூஷிமை சந்தித்துப் பேச்சவார்த்தை நடாத்தியுள்ளனர்.

இந் நிறுவனம் சந்தையில் விற்பனை செய்யப்படும் எரிவாயுவின் விலையை விட 10 ரூபா குறைவான விலையில் சிலிண்டரை விற்பனை செய்யவேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் தெரிவித்தார்.

இந் நிபந்தனையை ஏற்றுக் கொண்டால் மலேஷிய நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப் படுமெனவும் எம்.ஐ.எம் மூஷிம் மேலும் தெரிவித்தார். (க-7)

# கசிப்பு வைத்திருந்தமை ; பெண்கள் இருவர் கைது

(கேண்டாவில்)

கோண்டாவில் வடக்கு சென் செபஸதியான் வீதியில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு பெண்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, கடந்த திங்கட்கிழமை மாவட்ட யாழ்.நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இவர்களில் ஸ்ரீதர் ஜெய கௌரி என்பவருக்கு 2 வருடம் 8 மாதத்திற்கு கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

தர்மராஜா சாந்தினி என்ற பெண்ணுக்கு 40 ஆயிரம் ரூபா குற்றப்பணமும், 10 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ச-130)

# மீனவர்களுக்கு ஓய்வூதியம், பாதுகாப்பு வழங்க கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை

நாட்டில் உள்ள முழு மீனவ சமூகத்தினரையும், உள்ளடக்கும் வகையில் மீனவர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு முறைகளை விஸ்தரிப்பதற்குக் கடற்றொழில் நீரியல வள அமைச்சு நடவடிக்கை எடுததுள்ளது.

இதற்கமைய சகல மீனவர்களும் இந்தத் திட்டத்திற்குத் தமது பங்களிப்பினை அளிக்க தகுதியுடையவர்களாவர்.

இநதத்திட்டத்தின் கீழ் அடுத்த ஏப்ரல் மாதமளவில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மீனவர்கள் ஓய்வூதியத்திட்டத்திற்கு தமது பங்களிப்பினை செய்து கொள்வார்கள். இது சம்பந்தமான விபரஙகளை அமைச்சின் சகல பிராந்திய அலுவலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

அமைச்சர் சந்திரசேன விஜய சிங்கவின் பணிப்பின் பேரில் இந்தத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

1991 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மீனவர் ஓய்வூதியத் திட்டத்துக்கு இப்பொழுது 51 ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் சந்தாப் பணத்தைச் செலுத்திவருகின்றமை குறிப் பிடத்தக்கது. (க-4)

## இன்று கலந்துரையாடல்

புங்குடுதீவு தியாக தீபம் திலீபன மருத்துவமனை ஓராண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடுவது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பி.ப.2.00 மணியளவில் திலீபன் மருத்துவமனை வைத்திய அதிகாரி வண்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் புங்.குடுதீவு அரசியல்துறைப் பொறுப்பாளரும் கலந்து கொள்ளவுள்ளார். (ப-126)

# ஹொரவப் பொத்தானையிலும் பெருவெள்ளம் போக்குவரத்துச் சேவைகள் பெரிதும் பாதிப்பு

(அநுராதபுரம்)

கடந்த சில நாட்களாகத் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஹொரவப் பொத்தானை பிரதேசம் பெரு வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதி அமைச்சர் எஸ்.எம். சந்தரசேன இது குறித்துத் தெரிவிக்கையில்,

அநுராதபுரம் திருகோணமலை, வவுனியா திருகோணமலை நெடுஞ்சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதால் போக்குவரத்துச் சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

• ஹொரவப் பொத்தானை தேர்தல் தொகுதியிலுள்ள 400 ற்கும் அதிகமான குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பலத்த சிரமங்களை எதிர் நோக்கும் அதேவேளை, பல வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

மூன்று குளங்கள் உடைப் பெடுத்துளளன, 10 குளங்களில் நீர் நிரம்பி வான்பாய்கின்றன. ஹொரவப்பொத்தானை தேர்தல் தொகுதியிலுள்ள 110 குளங்களில் ஏற்கனவே நீர் நிரம்பியுள்ளன.

இப்பகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவது சம்பந்தமாக துரித நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குமாறு தொண்டர் ஸ்தாபனங்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, ரந்தம்பை நீர்த்தேக்கமும் நிரம்பி வழிவதுடன், மகாவலி நதிக்கு இந் நீரை அனுப்பும் வகையில் நீர்த்தேக்கத்தின் கதவுகளைத் திறந்து விட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளதாக மகாவலி அதிகார சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மகாகாவலி நதியின் நீர்மட்டம் திடீரென அதிகரித்து வருவதால் கழ்ப்படுகைக் கரையோரத்தில் வாழும் மக்களை இது குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. (ற-7)

## இளைஞனைக் காணவில்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச சேர்ந்த கணேசலிங்கம் சுரேஸ்குமார் (வயது 19) என்ற இளைஞன் ஒருவர் கடந்த 5ஆம் திகதியிலிருந்து காணாமல்போயுள்ளார்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட இளைஞனின் உறவினர்களால் பலதரப்பினரிடமும் முறையிடப்பட்டுள்ளது.

(ப-126)

## குற்றச் செயல்களில் ஐ.தே.க. ஈடுபடுகிறதா? ஆச்சரியமளிக்கின்றது என்கிறார் கருஜெயசூரிய

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் அனைத்துக் குற்றச் செயல்களையும ஐக்கய தேசியக் கட்சியே மேற்கொள்வதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பழிசுமத்திவருவது எமக்குப் பெரும் ஆச்சரியத்தையும் கவலையையும் தந்துள்ளது.

எமது கட்சியின் மீது இவ்வாறு வீண்பழிகளை சுமத்தும் அரசு உண்மையான குற்றவாளிகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு முயற்சி செய்கின்றமை குற்றவாளிகளுக்கே உதவுகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கருஜெயசூரிய.

எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த 11ஆம் திகதி இந்தியக் கலைஞர்கள் பங்குகொண்ட நிகழ்வில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், கட்சியினரும் ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

மரணமான, காயமடைந்த மற்றும் மன உளைச்சல்களுக்கு உட்பட்ட கலைஞர்கள் என அனைவரும் தமது அனுதாபத்தைத் தெரிவிப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இச்சம்பவம் இடம்பெற்ற ஒரு மணிநேரத்துள் அரசு ஊடகம் ஐக்கிய தேசியக் கட்சிகும் இச்சம்பவத்துக்கும் தொடர்பிருப்பதாகத தெரிவித்தமை ஆச்சரியமளிப்பதாகத் தெரிவித்த கருஜெயசூரிய, நாட்டில் நடைபெறும் அனைத்துக் குற்றச்செயல்களையும் ஐக்கிய தேசியக கட்சியே செய்வதாகக் குற்றஞ்சாட்டும் மலினமான அரசியலில் ஐக்கிய ம்க்கள் சுத்திர முன்னணி அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஜனாதிபதியின் வங்குரோத்து அரசியலை அண்மைக்கால நடவடிக்கைகள் காட்டுகின்றது என்றார்.

மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க இந்த சம்பவத்துடன் தன்னைத் தொடர்புபடுத்திக் கருத்து வெளியிட்டுள்ள ஜே.வி.பி.பிரசார செயலாளர் விமல் வீரவனசவிற்கு எதிராகத் தான் சட்டநடவடிக்கை எடுத்துள்ளதாகத் கூறினார்.

ஆயிரம் மில்லியன் ரூபாமான நஷ்டஈடு அந்த மனுவில் தான் கோரியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (க-4)

## புலிகளின் பகுதிக்கான வானூர்தித் தடையால் சமாதான முயற்சிகளுக்குப் பெரிதும் பாதிப்பு

### இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பகுதிக்கு உலங்குவானூர்தி செல்வதற்கு அனுமதியளிப்பதில்லை என அரசாங்கத்தின் அண்மைய அறிவிப்பானது, ஊசலாடிக்கொண்டிருக்கும் சமாதான முயற்சியினை மேலும் பாதிப்புக்கு உள்ளாக்கும என இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டுப் பகுதிக்கும இடையில் பயணம் மேற்கொள்வதற்கு தமது விமானப்படை உலங்கு வானூர்திகளை விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கும், இலங்கையின் சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வேயின் சமாதானப் பிரதிநிதிகளுக்கும் வழங்குவதில்லை என அரசாங்கம் முடிவுசெய்துள்ளது எனத் தகவல வெளியாகியுள்ளதை யடுத்தே இராணுவ ஆய்வாளர்கள இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே நெருக்கடிக்குள்ளாகியுள்ள சமாதான முயற்சியினை இது மேலும் பாதிக்கும். உலங்குவானூர்திகள் விடுதலைப் புலிகளின் பகுதிக்குச் செல்வதற்கு அரசாங்கம் முழுமையாக அனுமதி மறுப்பதற்கும் பதிலாக புலிகளிடமிருந்து அதற்குரிய கட்டணத்தை அறவிட்டிருக்கலாம்.

அரசாங்கம் இவ்வாறு கட்டணத்தைக் கோரியிருந்தால் விடுதலைப் புலிகள் அந்தக் கட்டணங்களைச் செலுத்தியிருப்பார்கள். அவர்களுக்கு இது ஒரு பிரச்சினையாகவே இருந்திருக்காது.

நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்களுக்கும் உலங்கு வானூர்திகளை வழங்குவதில்லை என்ற அரசாங்கத்தின் தீர்மானமானது அரசாங்கத்திற்கும், நோர்வேயின் சமாதான முன்னெடுப்பாளர்களுக்கும் இடையில் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள உறவு மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும நடவடிக்கையாகவே அமையும.

சமாதான முயற்சிகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. போர்நிறுத்தம் நூலிழையில் நீடிக்கின்றது. இவ்வாறான நிலைகளில் அரசாங்கம் இவ்வாறான முடிவினை எடுத்தால் அது பிரச்சினையை மேலும் பெரிதுபடுத்தும என இராணுவ ஆய்வாளர்கள் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ற-4)

## இரத்தம் அவசரமாகத் தேவை!


யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் எல்லாவகை இரத்தத்திற்கும் பெரும தட்டுப்பாடு நிலவுவதால் அவசரமாக இரத்தம் தேவைப்படுவதாக இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இரத்த வங்கியில் இரத்தத்திற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றமையால் வைத்தியசாலைக்கு வரும் பலவிதமான நோயாளர்கள் மற்றும் விபத்துக்களில் காயமடைந்து வருவோர் ஆகியோரைக்காப்பாற்ற இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, ஏற்கனவே இரத்ததானம் செய்தவர்களையும், இரத்ததானம் செய்ய விருமபுபவர்களையும் உடனடியாக இரத்த வங்கிக்குச் சமூகம்தந்து இரத்ததானம் செய்து நோயாளர்களின் உயிர்களைக் காப்பாற்றுமாறு இரத்தவங்கியின் வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (ற)

## ரஞ்சிக் கோப்பை கிரிக்கெற் தமிழகம் - பஞ்சாப் மோதல்

இந்தியாவில் சர்வதேசப் போட்டிகளுக்கு நிகரான. உள்ளூர்ப் போட்டியான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெற் போட்டித்தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.



இதில் ஒன்றான தமிழக அணிக்கும், பஞ்சாப் அணிக்குமிடையிலான போட்டி சென்னை எம.ஏ.சிதம்பரம் மைதானத்தில் கடந்த திங்களன்று ஆரம்பமாகி நடைபெறுகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி தனது முதலாவது இன்னிங்ஸில் முதலாம் நாள் ஆட்ட முடிவில் 7 விக்கெற் இழப்புக்கு 191ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஸ்ரீராம் 38ஓட்டங்களையும் ஸ்ரீநிவாஸ் 52ஓட்டங்களையும் பெற்றனர். தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் ஆட்டமுடிவில் 5 விக்கெற்றுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அணித் தலைவர் தினேஷ் மோங்கியா ஒரு ஓட்டத்துடனும் ரிதிந்தர் சிங்சோதி 24 ஓடடங்களுடனும் சர்வதேச போட்டிகளில் விளையாடும் யுவராஜ் சிங் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஒரு நிலையில் பஞ்சாப் அணி 3 விக்கெற்றுக்களை இழந்து 63 ஓட்டங்களை மாத்திரமே எடுத்திருந்தது. இந் நிலையில் நான்காவது விக்கெற்றுக்கு ஜோடி சேர்ந்த ரவ் நீத் ரிக்கி, பங்கஜ் தர்மானி இருவரும் இணைந்து 74 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர்.

ரவ்நீத ரிக்கி 71ஓட்டங்களையும் தர்மானி 23 ஓடடங்களையும் எடுத்தனர். அங்குர்கக்கர் 11 ஓட்டங்களுடனும் அமித் உனியால் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். பந்து வீச்சில் தமிழக அணிக்காக ஜேசுராஜ் 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினார். (து-7)

தொடர்ந்து ஆடிய பஞ்சாப அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டம் தொடர்ந்தபோது தமிழக அணி 244 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. மிகச் சிறப்பாக ஆடிய வாசுதேவதாஸ் 91ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். சக வீரர்கள் அனைவரும ஆட்டமிழந்ததால் அவர் தனது செஞ்சுரியை அடைய முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது. பந்துவீச்சில் வி.ஆர்.சிங் 5 விக்கெற்றுக்களையும் உனியால் 4 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

## விளையாட்டு செய்திகள்



டோக்கியோவில் உள்ள யோகோஹமா நகரில் நடைபெற்ற கால்பந்து வீரர்களுக்கான விருது வழங்கும் விழாவில், வழங்கப்பட்ட தங்கபூட் விருதுடன் பிரேசில் வீரர் எமர்சன்.

## பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் இன்று அவுஸ்திரேலியாவில் ஆரம்பம்

பாகிஸ்தான்-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி இன்று பேர்த்தில் ஆரம்பமாகிறது. இன்சமாம் உல்ஹக் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெற் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட் போட்டிக்காக உளளூர் அணியுடன் நடந்த 2 ஆட்டத்திலும் பாகிஸ்தான் மோசமாகத் தோல்வி அடைந்தது. இருந்த போதும் பாகிஸ்தான் அணியை திட்டவட்டமாகத் தீர்மானிக்க முடியாது என்று அவுஸ்திரேலிய அணயின துணைத்தலைவர் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் அவுஸ்திரேலிய அணி வீரர்கள் பாகிஸ்தானின் இன்சமாம் மற்றும் யூசுப் யுகானா ஆகிய இருவரை மட்டும் குறிவைத்துள்ளனர். நமபிக்கை வீரர்களான இவர்கள் நிலைதது ஆடினால் ஆட்டத்தின் போக்கு மாறிவிடும் என்பதால் இவர்களுககாகப் புது வியூகம் வகுத்துள்ளனர்.

பயிறசி மோதல்களில் கிடைத்த தோல்வி பாகிஸ்தான் அணியை விரக்தியில தள்ளியிருந்தாலும் நடக்கவிருக்கும் முதல் டெஸ்ட் போடடியில் அவுஸ்திரேலிய அணிக்கு சிரமங்களைக் கொடுக்க முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

டெஸ்ட் போட்டி முடிந்த பின்னர் முத்தரப்பு கிரிக்கெற் போட்டியில் பாகிஸ்தான் மோதவுள்ளது. அவுஸ்திரேலியாவுடன் மேற்கு இந்தியதீவுகள் அணியும் இப்போட்டியில் பங்குபற்றும்.

இதேவேளை, பாகிஸ்தான் அணியின் சர்ச்சைக்குரிய பந்துவீச்சாளரான சொகைப் மாலிக இப்போட்டியில் பங்குபற்றுவாரென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஒக்டோபரில் இலங்கையில் நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடரில் சொகைப் மாலிக் சட்டவிரோதமாக பந்து வீசுவதாக நடுவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். இதனையடுத்து அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் அவரது பந்து வீச்சுக்குறித்து ஆராயப்பட்டுள்ளது.

அவற்றின் முடிவுக்ள் இதுவரை அறிவிக்கப்படாத நிலையில் முதலாவது டெஸ்ட் போட்டியில் அவர் கலந்துகொள்வாரெனத் தெரியவருகிறது. (து-7)

கடனறிந்து காலம கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை - குறள்

வலம்புரி

# எரிக்சொல் ஹெய்மின் தூது வெற்றி தருமா?

சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது தொடர்பில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இத்தகைய சந்திப்பு ஏற்கனவே பல தடவைகள் இடம பெற்றுள்ள போதிலும் இந்த முறை எரிக்சொல்ஹெய்மின் வன்னிக்கான விஜயம் முக்கியத்துவம் பெறுவதாக அமைந்துள்ளது.

ஏனெனில் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரைக்குப்பின்னர் தூதுவர் எரிக்சொல்ஹெய்மின் வன்னி செல்வது இதுவே முதல்தடவையாகும்.

தலைவர் பிரபாகரனின் ஆணித்தரமான மாவீரர் தின உரை, அதற்கு அரசுவழங்கிய செப்படிவித்தையான பதில், விடுதலைப்புலிகளுக்கான வானூர்திச் சேவை ரத்து போன்ற முக்கிய சம்பவங்கள் நடந்தேறிய பின்னர் தூதுவர் எரிக்சொல் வன்னிக்குச் சென்று சு.ப.தமிழ்ச் செல்வனை சந்தித்திருப்பது,

கடந்தகால சந்திப்புக்களை விட வித்தியாசமானது என்பது ஏற்றுக்கொள்ளபடவேண்டிய விடயமாகும். அதேவேளை தலைவர் பிரபாவின் தெளிவான உரைக்கு அரச தரப்புப் பதில் திருப்தி அளிக்காததன் காரணமாக சமாதான சூழ்நிலை குழம்பிப் போய்விடுமோ என்ற ஏக்கம் மக்களிடையே இருந்தே வருகின்றது.

இந்நிலையில் அரசு-புலிகள் ஆகிய இருதரப்பினருடனும் சந்திப்புகளை நடத்தும் தூதுவர் எரிக்சொல்லிடம் இருந்து ஓர் தெளிவான பதிலை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேவேளை கொழும்பிற்கும் வன்னிக்கும் மாறி மாறிச் சென்று பேச்சுவார்த்தை நடத்தும் எரிக்சொல் ஏதேனும் விடயங்களில் முன்னேற்றம் கண்டுள்ளாரா? அவ்வாறாயின் அது எத்தகைய முன்னேற்றம் என்பதையும் அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

ஏனெனில் சமாதான முயற்சி என்பது அரசு-புலிகள் -நோர்வே ஆகிய முத்தரப்பினருடனும் சம்பந்தப்பட்டதல்ல. மாறாக பொதுமக்கள் என்ற தரப்பினரும் இங்கு முக்கிய இடம் பெறுகின்றனர். அதிலும் பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்ட முத்தரப்பினரும் தவிர நான்காவது தரப்பாக இருக்கக்கூடிய பொதுமக்கள் தமக்கு எட்டியவாறான - ஊகங்களின் அடிப்படையில் தகவல்களைவெளியிடக் கூடியவர்கள். இவ்வாறு சமாதான முயற்சியின் களநிலைமையை தெரிந்து கொள்ளாத பொதுமக்கள் தமது சுயசிந்தனையின்பாற்பட்டு முடிவுகளை எடுத்துக் கொள்வர்.

அத்தகைய முடிவுகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி விடவும் கூடும். அவ்வகையில் பேச்சுக்களின் ஒவ்வொரு முடிவுகளும் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

அதேநேரம் பொதுமக்கள் எத்தரப்பின் முடிவை அறிய விரும்புகிறார்கள் என்ற விடயமும் இங்கு நோக்குவதற்குரியதாகும். அதன்பிரகாரம் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தலைவர் பிரபாகரனின் மாவீரர் தினஉரை விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை ஐயம் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றது.

எனவே விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டுடன் இணைந்து செல்லக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏதேனும் அரச தரப்பிடம் இருக்கின்றதா? அவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா புலிகளின் நிலைப்பாட்டுடன் இசைந்து செல்வதற்கு தயாராக இருந்தாலும் அதற்கு ஜே.வி.பி இடம் கொடுக்குமா? போன்ற பல்வேறு வினாக்களுக்கான பதிலை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதற்கான விடையை அளிக்கும் பொறுப்பு எரிக்சொலிடமே உண்டு. சமாதான முயற்சியை முன்னெடுப்பது போல காட்டிக்கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கும் எண்ணம் ஏதேனும் உண்டா? இதனை தெளிவுபடுத்தும் பொறுப்பும் தூதுவர் எரிக்சொலையே சார்ந்ததாகும்.

ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடந்தேரிய பின்னர் அது பற்றி எதுவும் கவனத்திற் கொள்ளாது புதிய பாதையில் பேச்சுக்களை முன்னெடுக்க முயற்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிற்கு யதார்த்ததை தெளிவுபடுத்தும் கடமையும் நேர்வேயிடமே உண்டு.

# ஜனாதிபதி தொடர்ந்தும் ஆட்சியில் நீடிக்க எதிர்க்கட்சிகள் பூரண ஆதரவு வழங்க வேண்டும்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள்

(கொழும்பு)

பத்து ஆண்டுகளை தமது பதவியில் பூர்த்தி செய்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மேலும் 5 ஆண்டுகள் சேவையாற்ற எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்க வேணடும் என்று அமைச்சா மைத்திாபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒரே கட்சி இலங்கையைத் தொடாந்து 15 ஆண்டுகள் நிாவகித்தால மட்டுமே நாடு அபிவிருத்தி அடையும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவரின் கருத்துப்படி தொடா்ந்து 15 ஆண்டுகள் நாட்டை நிா்வகிக்க ஜனாதிபதியும் நாமும் தயாராக இருக்கிறோம் என்றும் மைத்திரிபால தெரிவித்தார்.

ஜே.வி.பி., ஸ்ரீ.சு.க. கூட்டு உடன்படிக்கையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள, திட்டங்கள் வரவு-செலவுத்திட்டத்தில் உள்ளடக்கபபட்டுள்ளன. இந்தக் கொள்கைகளுக்கு ஏற்ப நிதி அமைச்சர் வரவு-செலவுத்திட்டத்தை தயாரித்துள்ளார்.

கிராமியப் பொருளாதாரத்தை பலப்படுத்தும் பல திட்டங்கள் இதில் உள்ளன. இது பெருமைக்குரிய விடயமாகும்.

வறுமையான மக்கள் வாழும் பிரதேசங்கள் அதிக நிதி ஒதுக்கப்பட்டு, அபிவிருத்திக்கான வழி சமைக்கப்பட்டுள்ளது. இந்தப்பண்பை நாம் முன்னைய வரவு- செலவுத்திட்டங்களில் ஒருபோதும் அவதானித்திருக்கவில்லை.

1977-1994 வரை ஐக்கிய தேசியக்கட்சி தொடாந்து பதவி வகித்த போதிலும் பொலநறுவை, அனுராதபுரம் மாவட்ட பிரதிநிதிகளுக்கு அமைச்சரவை அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்கவில்லை. ஆனால் பொலநறுவை, அனுராதபுரம் பிரதேசங்களுக்கு அமைச்சாகளை நியமித்து அந்தந்த பிரதேச மக்களுக்கு எமது அரசாங்கம் அபிவிருத்திக்கான பாதையை உருவாக்கியுள்ளது.

சிறுவாகள் தொடாபான தேசிய திட்டங்கள் வரவு- செலவுத் திட்டத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மகாவலி வலயங்களில் வசிக்கும் விவசாயிகளின் வாழ்க்கை நிலையைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியாகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணங்களை மக்கள் வரவேற்றுள்ளனர். இது குறித்து நாம் பெருமிதம் கொண்டுள்ளோம். அரச ஊழியாகளுக்கு வழங்கப்பட்டுள்ள 40 சதவீத சம்பள உயாவு அரசாங்கத்தின் சாதனையாகும்.

எமது வரலாற்றில் இது போன்ற சம்பள உயாவு வழங்கப்பட்டதில்லை. அரச துறை இதனால் பலப்படுத்தப்பட்டுள்ளது.

எமது அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திற்கு சாதகமான வரவேற்பான கருத்துக்களே வெளியாகியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகக் கடமையாற்றிய இரண்டு ஆண்டுகள் நாட்டிற்கு நடந்தது என்னவென்பதை மக்களும நன்கறிவா. ரணில் பிரதமராகத் தொடாந்து 15 ஆண்டுகள் பதவி வகித்திருந்தால் நாடு அழிந்து சின்னாபின்னமாகியிருக்கும். 17 ஆண்டுகள் நாட்டை ஆண்ட ஐ.தே.கவுக்கு மேலும் 15 ஆண்டுகள் ஆட்சியைத் தருமாறு ரணில் விககிரமசிங்க கோருகிறாா. அப்பொழுது தான் நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும் என்றும் கூறுகிறார்.

நாட்டை அபிவிருத்தி செய்ய நாம் தயாராக உள்ளோம். அதனால் 15 ஆண்டுகள் பதவிவகிக்க எமக்கு அனுமதி தாருங்கள். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு எமக்கு நாட்டை நிர்வகிக்க ஆதரவு தாருங்கள் என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற-4)

# இலங்கை - இந்திய கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையும் ,இந்தியக் கடற்படையும் ஒன்றினைறந்து "ஒப்ரேஷன் எக்ஸ்செப்" என்ற பெயரில் இலங்கையின் மேற்குக் கடலில் கூட்டுப்படைப் பயிற்சி நடவடிக்கைகளில ஈடுபட்டுள்ளன.

இதறகாக இந்தியாவில் இருந்து 'சாரங்க' என்ற உலங்கு வானூர்தித் தாங்கி கரையோர ரோந்துக் கப்பலும், துர்க்கா பாய், தேஸ்முக் என்ற யுத்தக் கப்பல்களும் நேற்று முன்தினம் கொழும்பு கடற்படைத் தளத்திற்கு ஒரு தொகுதி அதிகாரிகளுடன் வந்தடைந்தன.

இலங்கைக் கடற்படையினரின் சுமார் 3 யுத்தக் கப்பல்கள் இந்தக் கூட்டுப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடவிருப்பதாகத தெரியவருகிறது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் பல கோடி ரூபா பெறுமதியுடன் இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட 'வையூரா' என்ற உலங்கு வானூர்தி தாங்கிக் கரையோர ரோந்துக் கப்பலும், இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட கப்ரியல் ஏவுகணைகளை செலுத்தக் கூடிய 2 யுத்தக் கப்பல்களுமே இப் பயிற்சியில் ஈடுபடுகின்றன.

இநதக் கூட்டுப்பயிற்சி தொடர்பாக இலங்கை இராணுவ உயர் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில் ,வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டுக் கடற்படைப் பயிற்சி நடவடிக்கையின் போது மிக முக்கியமாக கடற்கொள்ளைகளைத தடுத்தல், தேடுதலும் காப்பாற்றி மீட்டலும் மற்றும் கடற்பரப்பு மாசடைதல் போன்ற 3 விடயங்கள் இதில் கவனம் செலுத்தப் படுகின்றன.

அத்துடன் மிக நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த இலங்கை- இந்தியக் கூட்டுக் கடற்படைப் பயிற்சி இப்போது நிறைவேறியிருப்பதால் இரண்டு நாட்டுக்கும் இடையேயான பரஸ்பர இராணுவ ஒத்துழைப்புக்கள் மேலும் மேலும் வலுவடையும் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் இந்தியாவின் கடற்படைத்தளபதி வைஸ்அட்மிரல் அருண் பிரகாஸ் இலங்கைக்கு 5 நாள் விஜயமொன்றினை மேற்கொணடிருந்தார். இலங்கையுடனான பாதுகாப்பு உறவு விசேடமாக கடறபடை விருத்திக்கு அதிகம் உதவ இந்தியா ஆவன செய்யும் என்று அவர் உறுதி கூறியிருந்த நிலையில், தற்போது கூட்டுப்படைப பயிற்சியும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தககது.

இநதப் பயிற்சியுடன் சமாதான முயற்சிகளை ஒத்துப் பார்த்தால் சமாதான முன்னெடுப்புக்களை இடையில் நிறுத்திவிட்டு பல்வேறு நாடுகளுடனும், இராணுவ ஒத்துழைப்பு, உடன்படிக்கைகள் மற்றும் கடற்படைக் கூட்டுப்பயிற்சிகள் போன்றவற்றில் அரசு ஆர்வம் காட்டி வருவது புலனாகும்.

இதேவேளை, விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையேயான இராணுவச் சமநிலையை அடிப்படையாகக் கொண்டு செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மீது இக் கூட்டுப்படைப் பயிற்சியானது பெரும்பாலும் பாதகமான ஓர் விளைவையே ஏற்படுத்தும் என அரசியல் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. (ற-4)

# வரதர் அணி உறுப்பினருக்கு மே.மு.நீதிமன்றம் பிணை

(கொழும்பு)

கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டரை வருடங்களாக மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஈ.பி.ஆா.எல்.எப். வரதா அணி உறுப்பினரான வடிவேல் எனப்படும் உலகசேகரம் சிவகுமாரை மேன் முறையீட்டு நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

இதற்கான உத்தரவு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

15.04.2002ல் செங்கலடியில் வைத்து கைக்குண்டுடன் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவரை 50 ஆயிரம்ரூபா ரொக்கப் பிணையில் செல்லுமாறு நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்த போதிலும் அந்தத் தொகையை குறைக்குமாறு நீதிமன்றத்திடம் மற்றுமொரு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணைத் தொகையை ரூபா 25 ஆயிரமாகக் குறைத்து இரண்டு சிவில் அதிகாரிகளின் சரீரப் பிணையில் செல்ல அனுமதியளித்துள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் கைக்குண்டுடன் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்படட 4 பெண்கள் உட்பட 8 விடுதலைப் புலிப் போராளிகளும இரண்டாவது தடவையாக நீதிமன்றத்தில் ஆஜரானாகள். கடந்த தவணையின் போது ஆஜராகாத இருவா சட்டத்தரணி ஊடாக ஆஜரானார்கள்.

இவர்கள் மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி 8ஆம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று நீதிபதி எம்.எச். எம். அஜ்மீா உத்தரவிட்டுள்ளாா.

இதற்கிடையில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா அணியைச் சோந்த சச்சு மாஸ்டா உட்பட இருவா சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான முதலாவது சந்தேக நபரான மகேந்திரன் புவிதரன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.

மழை வெள்ளம் காரணமாக களுத்துறை சிறைச்சாலையிலிருந்து இவரை அழைத்துவர முடியாதிருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி இவரது விளக்கமறியலை எதிர்வரும் 28ஆம் திகதி வரை நீடித்தார்.

இரண்டாவது சந்தேக நபரான சிறைச்சாலை உத்தியோகத்தர் தம்பிராஜா அருளம்பலம் மட்டும் ஆஜர்படுத்தப்பட்டார். அவருக்கு 28ஆம் திகதி வரை விளக்க மறியலும் நீடிக்கப்பட்டது. (க-4)

## சாயி அருளமுதம்



ஏன் தமது சந்நிதிக்கு இறைவன் எல்லோரையும் கவர்ந்து இழுக்கிறார்? இதயத்தை உழுது இறைவனின் பேரருளைப் பெறுவதற்கு அதைத் தயார்ப்படுத்தி அதன்பின் விதைகளை வளர்த்து ஆனந்தமெனும் அறுவடையை அமுக்கிவிடும் களைகளான தீய எண்ணங்களை அழித்து 'ஞானம' என்னும் அறுவடையைச் சேகரிக்கச் செய்வதற்கேயாம். அந்த ஞானம் கிருஷ்ணரிலேயே பு'ரணத்துவமடைகிறது. ஏனெனில் 'கிருஷ்ணா' என்பது 'தூய சாரம்' எல்லாவற்றிலும் உயர்வான நியமம் சத், சித் ஆனந்தம் எனவும் பொருள்படும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# தப்பியோடிய கைதிகளுக்கு கடூழியச் சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்துவதற்காக கொண்டுசென்றபோது கடந்த மாதம் 16 ஆம் திகதி தப்பியோடிய இரண்டு கைதிகளுக்கும் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுக் கூடிய சிறைச்சாலை நியாய சபையினாலேயே இத் தண்டனை வழங் கப்பட்டுள்ளது.

இச்சபையில் சிறைச்சாலை அத்தியட் சகர் இந்திரகுமார், யாழ்.நீதி மன்ற மேல திக நீதிபதி சிறிநிதி நந்தசேகரம் உட்பட சபையின் பிரதிநிதிகள் கலந்துகொண் டனர்.

தப்பியோடி கைதுசெய்யப்பட்ட யோக ராசா யோகேஸ்வரன் என்பவருக்கு 5 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் பழனி சுமன் என்பவருக்கு மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனையும் வழங்கப் பட்டுள்ளது. (ச)

# தொண்டர் ஆசிரியர் உள்ளீர்ப்பிற்கு தடை!

## 21 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களை அரச சேவையில் சேர்த்துக்கொள்வது தொடர் பாக இறுதிமுடிவு எதுவும் எடுக்கவில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம் நேற்று வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் இடம்பெற்ற தொண்டர் ஆசிரியர்களின் தெரிவில் தகுதியற்றவர்கள் சேர்க்கப்பட் டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால் தொண்டர் ஆசிரியர் தொடர்பான சகல நியமனங்களையும் இடைநிறுத்துமாறு மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர்கள் மற்றும் செயலாளர்களுக்கும் ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளதாக அச்செய்தி யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்தங்கிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்காக அங்கு கடமையாற்றிய தொண்டர் ஆசிரி யர்களுக்கு நியமனம் வழங்குவதென முன் னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இவ்விடயத்தில் மோசடி நடந்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதை அடுத்தே தொண்டர் ஆசிரியர் நியமனங்களை தற் காலிகமாக இடைநிறுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் பயிற்சிபெற்று வரும் 41 ஆயிரம் பட்டதாரிகளில் 21 ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகள் நீங்குமென எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (ச-4)

# இளைஞனின் கொலைக்கு புலிகள் கடும் கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரின் அக்கரைப்பற்று பிரதேசத்தில் கடந்த 13 ஆம் திகதி இரவு இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தினை அம்பாறை மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன் வன்மையாகக் கண்டித்து அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளார்.

அவரின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது, கொல்லப்பட்ட இளைஞர் இரண்டு மாவீரர்களின் சகோதரராவார். இச்சம்பவம் முழுமையாக இராணுவக் கட் டுப்பாட்டுப் பிரதேசத்திலே நடைபெற்றுள் ளது.

இதனை விடுதலைப் புலிகள் வன்மை யாகக் கண்டிக்கின்றனர். இதுபோன்ற பல சம்பவங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே நடைபெற்றுள்ளது. இவை அனைத்திற்கும் இராணுவத்தினரே பொறுப் பேற்கவேண்டும் எனவும் இவ்வாறான சம்ப வங்கள் மேலும் நடைபெறாமல் இராணு வத்தினர் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமெனவும் இக்கண்டன அறிக்கை யில் தெரிவித்துள்ளார். (ச-4)

## "அ" புரத்திலிருந்து...

யிறக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து தரைமார்க்கமாகவே சொல்ஹெய்ம் கிளி நொச்சி புறப்பட்டார். இதனால் குறிப்பிட்ட நேரத்திற்கு சந்திப்பு இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஹெலிகொப்டர் பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சிக்கு சென்று எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவி னரை அங்கிருந்து ஏற்றிக்கொண்டு கொழும்பு புறப்பட்டது.

பாதுகாப்பு காரணங்களுக்காக புலி களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான விமானசேவைகளை தாம் மேற்கொள் ளப்போவதில்லை எனத் தெரிவித்த பாது காப்பு அமைச்சு நேற்று எரிக் சொல் ஹெய்மை வன்னிக்கு அழைத்துச் செல்வ தற்கு இணங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ச-04)

## ஜே.வி.பியின் முரணான...

சமாதான முயற்சிகள் குறித்தும் நோர்வேயின் அனுசரணை குறித்தும் ஜே.வி.யினர் பல்வேறு முரணான கருத் துக்களை வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறான ஜே.வி.பியின் கருத்துக்கள் சமாதான நடவடிக்கைகளை பாதிக்கும் என அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக இருந்துகொண்டு ஜே.வி.பி கட்சி சமாதான முயற்சிகளுக்கு எதிரான பிரசார நடவ டிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. இது அரசாங்கத்தின் மீது சந்தேகத்தையே ஏற் படுத்துகிறது.

இந்நிலையில் நோர்வேயின் மத்தி யஸ்தம் குறித்து, சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் அரசின் நிலைப்பாட்டை ஜனாதிபதி உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் என அவ் அறிக்கையில் கோரப் பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான சமாதான முயற்சிகளும் நோர்வேயின் மத்தியஸ்தத்திற்கும் டோக் கியோ மாநாட்டு இணைத் தலைமை நாடு கள் ஆதரவு தருவதாக அவ் அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்அறிக்கையில் டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு கூட்டுத் தலைமை வகித்த நாடுகளான ஜப்பானின் சார்பில் ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் நெதர்லாந்து தூதுவர் சூசன் பிலான் ஹரியும், அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லாங்ஸ்ரட்டும் கூட்டாக கையொப் பமிட்டுள்ளனர்.

இதேவேளை இக் குழுவினர் நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந் தித்து உரையாடி இருந்தமை குறிப் பிடத்தக்கது. (ச-09)

## எரிக் சொலுடனான சந்திப்பு...

மூலம்தான் இந்த நிலையை சீராக்கமுடி யும் என்பதை நாங்கள் நோர்வேத் தரப்பு ஊடாக மீண்டும் ஆணித்தரமாக வெளி யிட்டு இருக்கின்றோம்.

**கேள்வி: இதற்கு காலக்கெடு ஏதும் விதித்துள்ளீர்களா?**

பதில்: நோர்வே அனுசரணையாளர் களும் பெரிய நம்பிக்கையோடு தங்களது நிலைப்பாட்டை தெரிவித்ததுபோல் தெரிய வரவில்லை. அவர்கள் முயற்சி எடுக்கிறார் கள், கடுமையான முயற்சியோடு இருப்பது போலவே தெரிகின்றது. தெற்கிலிருந்து, அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பதில்கள் கிடைக்கும் என்ற நம்பிக் கையை அவர்களால் தரமுடியவில்லை.

**கேள்வி: உங்களுடைய எதிர்பார்ப்பு எப்படி இருகின்றது.? நம்பிக்கை தருவதாக இருக்கின்றதா?**

பதில்: எங்களைப் பொறுத்தவரையில் எந்தவித நம்பிக்கையும் இன்றைய சந்திப் பில் ஏற்படுத்தபடவில்லை என்றுதான் நான் நினைக்கின்றேன்.

**கேள்வி: நம்பிக்கை ஏற்படுத்தப்படாவிட் டால் அடுத்தகட்டமாக என்ன நடவடிக்கை எடுப்பது என்று உத்தேசித்திருக்கிறீர்கள்?**

பதில்: மக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகள், நெருக்கடிகள் அதிகரிக்கின் றன. இராணுவத்தினர் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். யுத்தநிறுத்த சூழ லுக்கு பல நெருக்கடிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. தமது உரிமைகளை யும் நாளாந்த வாழ்வியல் நெருக்கடிக ளுக்கு தீர்வுகளையும்காண போராட்ட முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டுவரு கின்றனர். அதற்கு அரசாங்கம் மதிப்ப ளித்து தீர்வுகாணவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

எதிர்வரும் நாட்களில் மக்கள் தமது நிலைப்பாடுகளை, கோரிக்கைகளை, அபி லாசைகளை வெளிப்படுத்தும் நடவடிக்கை களில் ஈடுபடும் சூழல் தோன்றிவருவதை உணரமுடிகிறது. அண்மைக் காலத்தில் இராணுவம் எடுத்த நடவடிக்கைகளை, வன்முறைகளை, தவிர்த்து இந்த யுத்த நிறுத்தத்துக்கு களங்கம் ஏற்படாது பார்த் துக்கொள்ளவேண்டும் என சர்வதேச அனு சரணையாளர்களுக்கும் யுத்தநிறுத்த கண் காணிப்புக் குழுவுக்கும் கூறியுள்ளோம்.

**கேள்வி: போர்நிறுத்தச் சூழல் எப்படி யுள்ளது.?**

பதில்: அண்மையில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை போன்ற இடங்களில் நடைபெற்ற சம்ப வங்கள் போர்நிறுத்த சூழலுக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன. கண் காணிப்புக் குழுவினரை இராணுவத்தினர் மதிப்பளிக்காது நடத்தியுள்ளனர். அவர் களுக்கு முன்பாகவே மக்கள் மீது யுத்த நிறுத்தத்தை மீறும் தாக்குதல்களை நடத் தியுள்ளனர்.

ஆகவே, அரசிடம் இருந்தும் படையின ரிடம் இருந்தும் யுத்தநிறுத்தத்திற்கான உத்தரவாதத்தை பெற்றுத்தர வேண்டும் என்று கோரியுள்ளோம்.

**கேள்வி: கடந்த மாவீரர் தினத்துடன் ஒப்பிடும் போது இம்முறை மாவீரர் தினத்தில் இராணுவத்தினரின் நெருக்கடிகள் அதிகரித் துள்ளதை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறீர்கள்?**

பதில்: மாவீரர் தினத்தில் மட்டுமல்ல. முன்னைய ஆட்சியின்போது பேச்சு வார்த்தை இடைநிறுத்தப்பட்டிருந்தாலும் யுத்தநிறுத்த சூழல் ஓரளவு செம்மையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் புதிய அரசாங்கம் பதவியேற்றபின் படைத் தரப்பினர் மிக மோசமாக யுத்தநிறுத்த மீறலில் ஈடுபடுகின்றனர். இராணுவத்தினர் யுத்தத்தை நோக்கியே நகர்கின்றனர்.

**கேள்வி: வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவம் யுத்தத்தை நோக்கிச் செல்வ தாக கூறுகின்றீர்கள். அதேபோல் விடுத லைப்புலிகளும் யுத்தத்திற்கான ஆயத்தங் களை செய்வதாக கூறப்படுகின்றதே?**

பதில்: அது தவறு. விடுதலைப்புலிகள் எப்பொழுதுமே எமது பிரதேசம் மீதும் மக்கள் மீதும் யுத்தம் கட்டவிழ்த்து விடப் படும்போது அதை எதிர்கொண்டு தற் காத்துக்கொள்ளும் பொறுப்பில் உறுதி யாக உள்ளோம். ஆனால், படைத் தரப் பில்தான் யுத்தத்திற்கான முன்நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாதுகாப்பு செலவிற்கு அதிக நிதி ஒதுக்கீடு, படை ஒத்திகை புதிய காவலரண் அமைப்பு, மக்கள் மீதான கெடுபிடிகள், ஏனைய நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்கள் - ஒத்திகைகள் என எல்லாமே யுத்த சூழலை நோக்கி நகர்வதுபோலவே தோன்றுகின் றது.

**கேள்வி: டிசம்பர் 25 இல் விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை ஒருதலைப் பட்சமாக அறிவித்து மூன்று வருடங்கள் ஆகின்றன. இநநிலையில் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

பதில்: மாவீரர் தின உரையில் தலை வர் தெளிவாக கருத்துக்களை முன்வைத் திருக்கிறார். மக்கள் இன்றைய சூழலைத் தெளிவாகப் புரிந்துள்ளனர். தமது அன் றாட பிரச்சினைக்கு தீர்வுவேண்டி, உரிமை கள்வேண்டி போராட்டங்களை முன்னெடுக் கின்றனர். இது இன்னும் தீவிரமடையும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

**கேள்வி: ஜே.வி.பி. சமாதானத்தை எதிர்த துக்கொண்டு நோர்வே அரசாங்கத்திடம் நிதியுதவிகளைப் பெற்றுள்ளதைப் பற்றி ?**

பதில்: சமாத்தானம் முன்னெடுப்புக்களை அடிப்படையாக கொண்ட உதவிகள் வழங் குவதில் சர்வதேச சமூகம் தளர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கே எமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளோம். அவ் வாறான தளர்வு தெற்கில் சமாதானத்தை சீர்குலைக்கும் சக்திகளுக்கு வலுவூட்டு வதாக அமையும் என்பதை எடுத்துக் கூறி யுள்ளோம். சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து சமாதான வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

**கேள்வி: மாவீரர்தின உரைக்கு சர்வதேச சமூகத்திடம் இருந்து நல்ல சமிக்ஞைகள் கிடைத்துள்ளனவா?**

பதில்: சர்வதேச சமூகம் தலைவரின் நிலைப்பாட்டை முழு அளவில் ஏற்று ஆத ரிப்பதாகவே தெரிகின்றது. ஒரு நியாய மான நிலைப்பாட்டை தேசியத் தலைவர் முன்வைத்துள்ளார். கடந்த காலத்தில் நாம் எடுத்த முயற்சிகள், பேச்சுவார்த்தை முயற்சிகளின் போது நடைபெற்ற சம்ப வங்கள் எல்லாவற்றையும் வைத்து இன் றுள்ள சூழ்நிலை சம்மந்தமாகத் தெளிவு படுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் நாம் எடுக்கவேண்டிய நிலைப்பாடுகள் குறித்தும் முன்வைத் துள்ள அதே சமயம், சமாதான முன்னெ டுப்பு தொடர்பாகவும் தனது பற்றுறுதியை வெளிப்படுத்தியுள்ளார். அதனை சர்வதேச சமூகம் தெளிவாகப்புரிந்து ஏற்றுக்கொண்டு இருக்கின்றது என்றே நான் நம்புகிறேன்.

**கேள்வி: போர்நிறுத்த உடன்படிக்கை நெருக்கடி நிலைக்கு உள்ளாகியிருப்பதாக சொல்ஹெய்ம் சொன்னார். நீங்கள் போர் நிறுத்தத்தை விட்டுவிலகப்போவதாக ஏதும் கூறினீர்களா?**

பதில்: போர்நிறுத்த உடன்படிக்கையில் படைத்தரப்பால் ஏற்படுத்தப்பட்ட அண் மைக்கால நெருக்கடிகள் பற்றி தெளிவாக விளக்கியுள்ளோம். அதை வைத்துக் கொண்டு அவர் அப்படிக் கூறியிருக்கலாம். ஏனெனில் மன்னார், திருகோணமலை, வவு னியா, யாழ்ப்பாணம் போன்ற பல இடங் களில் நடைபெற்ற சம்பவங்கள் இதையே வலியுறுத்துகின்றன.

**கேள்வி: யுத்தம் இல்லாது விடுதலைப் போராட்டத்தை எந்தவழியில் கொண்டு செல்லப் போகின்றீர்கள்?**

பதில்: யுத்தம் இல்லாமல் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது எமது கைகளில் இல்லை. இராணுவம் ஆக்கி ரமித்துள்ள தமிழர் தாயகத்தில் மேற் கொண்டுவரும் நெருக்கடிகளுக்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர். இதை மறுதலித்து வன்முறையில் இராணு வம் ஈடுபடுமானால் மோசமான விளைவு களே ஏற்படும். அப்போது எமது தலைமை தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளும் என்றார். (ச-04)












இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2004 இல் அச்சிட்டு வெளிமிடப்பட்டது.